விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 24 செவ்வாய்க்கிழமை (11.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 296

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஐ.தே.கவின் நிர்வாகத்தை ஏற்படுத்த நிபந்தனையின்றி ஆதரவு கிடையாது

### மனோ கணேசன் திட்டவட்டம்

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தை ஏற்படுத்துதற்கான ஜனநாயக மக்கள் முன்னணியின் ஆதரவை நிபந்தனையில்லாமல் வழங்க முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மேயராக முஸாம்மில் –ரணில் அறிவிப்பு



கொழும்பு மாநகர சபையின் மேயராக நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கி தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற ஏ.ஜெ.எம். முஸாம்மில் பெயரிடப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அறிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் உப மேயராக டய்ரஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

## மனோ கணேசனின் விருப்பு வாக்கு! குழப்பத்தில் தேர்தல் திணைக்களம்

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் பெற்றுள்ள விருப்பு வாக்குகள் பற்றிய விபரத்தை தேர்தல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.


ஐ.தே.க. சார்பில் மாநகர முதல்வர் வேட்பாளராக நிறுத்தப்பட்ட ஏ.ஜே.எம் முஸாம்மில் 55 448 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். அவரை அடுத்து கிருசன் ஜோன்ராம் 9 ஆயிரத்து 966 வாக்குகள் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரான மனோ கணேசனுக்கு 28 ஆயிரத்து 433 விருப்பு வாக்குகள் கிடைத்துள்ளதாக தேர்தல் திணைக்களம் கூறியுள்ளது.

ஆனால் இந்தத் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு கொழும்பு மாநகர சபையில் கிடைத்த மொத்த வாக்குகள் 26 ஆயிரத்து 229 மட்டுமே ஆகும்.

இந்த நிலையில் மனோ கணேசனுக்கு 28 ஆயிரத்து (20ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதியைச் சந்திக்கும் இந்திய வெளியுறவுச் செயலர் மத்தாய்



## முல்லேரியா தாக்குதல் சம்பவம் 16 துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

முல்லேரியாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பாக 16 துப்பாக்கிகள் சகிதம் நபர் ஒருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

12 பிஸ்ரல்கள், 2 சுழல் துப்பாக்கிகள் மற்றும் ரி 56 ரக துப்பாக்கிகள் என்பன கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் அடங்கும். மேற்படி துப்பாக்கி பிரயோக சம்பவம் தொடர்பாக இதுவரை 37 வாக்கு மூலங்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பதிவு செய்துள்ளனர்.

மேற்படி துப்பாக்கி பிரயோகத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர பலியானதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா-9)

## முல்லேரியா சம்பவம் அரசாங்கத்துக்கு பேரழிவு

### அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

முல்லேரியாவில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடைபெறுவதாகவும் விசாரணைகள் முடிபடையும்வரை இது குறித்த விபரங்களை வெளியிட முடியாது எனவும் இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார். யார் முதலில் சுட்டார் என்பதை கண்டறிவதில் அர்த்தமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி துப்பாக்கி பிரயோகத்தில் ஆளும் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தொழிற்சங்க ஆலோசகருமான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர பலியானதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருகின்றமை குறிப்பிடத் தக்கது.

சனிக்கிழமை தேர்தல் நடைபெற்ற 23 உள்ளூராட்சி மன்றங்களில் 21 மன்றங்களை ஐ.ம.சு. கூட்டமைப்பு வென்றமை தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசுகையிலே அமைச்சர் டலஸ் அழகப்பெரும,

பொலிஸாரும் அமைச்சுப் பாதுகாப்பு (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானில் நிலநடுக்கம்

பயங்கர நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் நிலைகுலைந்துள்ள ஜப்பானின் புகுஷிமா பகுதியில் நேற்று நண்பகல் 11.45 மணிக்கு மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 5.5ஆக பதிவாகியுள்ளது. கடந்த மார்ச் மாதம்தான் ஜப்பானில் பயங்கர நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஏற்பட்டது. இதில் புகுஷிமா அணுமின் நிலையத்தில் உள்ள அணு உலைகள் வெடித்தன.

அந்த இரட்டை பேரழிவுகளில் 21 ஆயிரம் பேர் பலியானார்கள். அதில் இருந்தே ஜப்பான் இன்னமும் மீளவில்லை. அதற்குள் புகுஷிமா பகுதியில் நேற்று நண்பகல் 11.45 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 5.5 ஆக பதிவாகி (20ஆம் பக்கம் பார்க்க)

## பாரத லக்ஸ்மனின் கன்னத்தில் அறைந்தார் துமிந்த சில்வா?

### சாரதி சாட்சியம்

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் ஆதரவாளர் ஒருவரே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக அவரது சாரதி சாட்சியம் அளித்துள்ளார்.

முல்லேரியாவில் வல்பொல சந்தியில் இரு தரப்பினரும் சந்தித்துக் கொண்ட போது அவர்கள் பயணம் செய்த வாகனங்களை விட்டு கீழே இறங்கிய இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றதாகவும் இதனைத்தொடர்ந்து பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் கன்னத்தில் துமிந்த சில்வா அறைந்ததாகவும் அவர் தனது (20ஆம் பக்கம் பார்க்க)



துமிந்த சில்வா

## தமிழினியின் தடுப்புக் காவல் நீடிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் அணித் தலைவியான தமிழினியின் தடுப்புக் காவல் இம்மாதம் 29–ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

தமிழினி தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனைகள் குறித்தும் சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் ஆனால் இதுவரை பதில் கிடைக்கவில்லை என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று நீதிமன்றத்துக்குத் தெரிவித்தனையடுத்தே இந்தத் தடுப்புக்காவல் நீடிக்கப்பட்டது. இதற்கு முன்னரும் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது இதே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவ்வாறு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# செல்வம் அடைக்கலநாதன் உண்ணாவிரத முஸ்தீபு

மன்னார் வலயக் கல்விப் பணிமனையில் தற்போது பணியாற்றி வரும் வலயக் கல்விப்பணிப்பாளர் இடமாற்றம் செய்யப்படும் போது அல்லது ஓய்வு பெறுகின்ற போது அவருக்கு அடுத்ததாக உள்ளவருக்கு குறிப்பிட்ட பதவியினை வழங்கவேண்டும் அல்லது மன்னாரின் விகிதாசாரத்திற்கு அமைவாக புதிய நியமனம் செய்யப்படவேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- மன்னார் வலயக்கல்வி திணைக்களத்தில் தற்போது கடமையாற்றி வரும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு இடமாற்றம் கிடைக்கப்பெற்றுள்ளமை தெரியவருகின்றது. இந்த நிலையில் அவருடைய இடத்திற்கு புதிதாக வேறு ஒருவரை நியமனம் செய்வற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால் புதிதாக எவரையும் நியமனம் செய்யக்கூடாது. அவருக்கு அடுத்ததாக உள்ளவருக்கு மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியினை வழங்கவேண்டும் அல்லது மன்னாரின் விகிதாசாரத்திற்கு ஏற்ப புதிய நியமனம் வழங்கப்பட வேண்டும். இதனை விடுத்து இந்த விடயத்தில் குளறுபடிகள் இடம் பெறும் பட்சத்தில் மன்னாரில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை தான் மேற்கொள்ள இருப்பதாகவும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (ச-5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 27ஆவது பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப் பட்டம் பெற்ற

### செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்



அவர்கள் அன்பு, அறிவு, அடக்கம், ஆளுமை, ஆற்றல், நேரிய உயர் சிந்தனை நிரம்பியவரும் குறுகிய காலத்தில் பல வியக்கத்தக்க சமூக நற்பணிகள் ஓய்வின்றி நிறைவேற்றிய இந்த தெய்வப்பிறவியை எச்சாட்டி வைரவர் ஆசியுடன் நாமும் இதயபூர்வமாக வாழ்த்திப் பெருமையடைகின்றோம்.

சுதுமலை தெற்கு
எச்சாட்டி வைரவர் கோயில்
தர்மகர்த்தா சபையும், அடியவர்களும்

(6368)

## தொலைந்துவிட்டது

வறணி அம்மா கடைக்கும் துன்னாலைக்கும் இடையில் ஒரு பாக்குடன்(Bag) நான்கு சாதகப் புத்தகங்கள் (குறிப்பு) தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

T.P.:- 0770886326
0770456669

(சி-4696)

# நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2011

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின் றது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 12-10-2011 தொடக்கம் 24-10-2011 பி.ப 4.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 25-10-2011 மு.ப 10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 25-10-2011 மு.ப 10.30 மணிக்கு ( திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/ செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில்' என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்திற்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | பலாலி 6ம் குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் (ஆனைவிழுந்தான்) | 2800.00 | 500.00 | M10/C10 |
| 02 | வெள்ளக்கடவை ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 5500.00 | 500.00 | M9/C10 |
| 03 | முக்குறுணி பிள்ளையார் வீதி கல்லிட்டுத் தாரிடல் | 4100.00 | 500.00 | M10/C10 |
| 04 | டிப்போ முன் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 6600.00 | 500.00 | M9/C10 |
| 05 | தபால்பெட்டி முன் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 2600.00 | 500.00 | M10/C10 |
| 06 | நாராயணா வீதி 2ம் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 2800.00 | 500.00 | M10/C10 |
| 07 | ஆடியபாதம் வீதி குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 3700.00 | 500.00 | M10/C10 |
| 08 | இராமகிருஸ்ணா ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 3000.00 | 500.00 | M10/C10 |
| 09 | பாற்பண்ணை 5ம் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 3700.00 | 500.00 | M10/C10 |
| 10 | கலாசாலை 2ம் ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் தொடர்வேலை | 2100.00 | 500.00 | M10/C10 |
| 11 | காளி கோவில் வீதி குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 3150.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேச சபை
கொக்குவில்

ப. வசந்தகுமார்
தவிசாளர்
நல்லூர் பிரதேச சபை

(சி-4699)

# மகா ஜீவமுத்தி அடைந்தார்

## செல்வி பொன்னம்பலம் சிவபாக்கியம் B.Sc

[இளைப்பாறிய உப அதிபர், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, ஸ்தாபகர் கடவுள் சந்நிதி உடுவில், தலைவர் சமாதி குருபீடம் மறுவம்புலம்]



உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவபாக்கியம் (மலர் அக்கா, மலர் ரீச்சர் ) 10.10.2011 (திங்கட்கிழமை) மகா சமாதி கைகூடியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், திருமதி சிவமூர்த்தி மகிழ்மணியின் (அவுஸ்திரேலியா) அன்புச் சகோதரியும், சொரூபா (அவுஸ்திரேலியா) அவர்களின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் சமாதிநிலை திருவுடல் இன்று (11.10.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு காரைக்கால் சமாதி பூமியில் பூகற்பம் செய்யப்படும்.

கடவுள் சந்நிதி
அம்பலவாணர் வீதி, உடுவில்.

தகவல்:
பொ.கோவர்த்தனராஜா

(6373)

# கண்ணீர் அஞ்சலி

## கனகசபை சின்னராசா J.P

தோற்றம்
30
03
1934



மறைவு
09
10
2011

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.சி. சிவனேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை கனகசபை சின்னராசா J.P. அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அன்னையைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

இங்ஙனம்
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம், மல்லாகம்.

(6371)


# மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

## Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

## மீண்டும் யாழில்

11.10.2011 முதல் 17.10.2011 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/- ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன்(சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.

(C-4677)

# இன்று ஒரு தகவல்

## திரும்பி வருவது நல்லது!

. ஓர் ஊரிலே விவசாயம் செய்கிற விவசாயி இருந்தார். அவருக்குச் சொந்தமாக நிறைய நிலம் இருந்தது.

அவருக்கு இரு பிள்ளைகள் இருந்தார்கள். இருவரும் ஒற்றுமையாக இருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் இருவருக்கும் இடையில் சண்டை ஏற்பட்டது. மூத்தமகன் அப்பா கூடவே இருக்க வேண்டுமென்று ஆசைப் பட்டான். இளையமகன் பிரிந்து செல்ல வேண்டும் என்று பிடிவாதமாக நின்றான்.

தந்தை சரி... என்று கூறி தன்னிடமிருந்த சொத்தை எல்லாம் இரண்டு பாகமாகப் பிரித்தார். ஆளுக்கொரு பங்கைக் கொடுத் தார். இதில் இளையமகன் தனக்குக் கிடைத்த பங்கையெல் லாம் விற்றான். ஊர் ஊராகச் சுற்றினான். வீணாகக் கேளி க்கை, வேடிக்கை, விளையாட்டு இப்படியெல்லாம் தனது பொழுதை போக்கினான்.

கடைசியில் அவனது பணம் எல்லாம் செலவாகியது. பிச்சை யெடுக்க ஆரம்பித்தான். ஊர் ஊராகச் சென்று பிச்சையெடு த்தான்.

ஒருநாள் இவன் பிச்சையெடுத்துக் கொண்டிருப்பதை அவ தானித்த ஒருவன் "ஏய்... நீ... இன்னார் பிள்ளைதானே!" என்றார்.

"ஆமாம்..." என்றான்.

"ஏன் தம்பி... இப்படி வீணாக அலைந்து கொண்டிருக் கிறாய்?" என்று கேட்டார்.

"எல்லாம் என்னால்தான்... ஒற்றுமையாக இருந்திருக்க லாம்... புத்தி கெட்டுப்போய் சொத்தைப் பிரித்துத் தருமாறு பிரச்சினை கொடுத்தேன். சொத்தைப் பிரித்து எனது பங்கைத் தந்தார்கள். சொத்து அனைத்தையும் நாசம் பண்ணிவிட்டேன். இப்போது பிச்சைப் பாத்திரம் ஏந்தித் திரிகிறேன்."

"சரி... இப்போதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை... பேசாமல் திரும்பவும் உனது தந்தையிடம் போ... அவர் உன்னை ஏற்றுக்கொள்வார்." அவன் யோசித்துப் பார்த்தான்.

"எனது தந்தைக்கும் என்மேல் பாசம் அதிகம். அவர் என்னை மன்னிப்பார். அவர் சிரமப்பட்டு சேர்த்த சொத்தையெல்லாம் நான் அழித்துவிட்டேன். அவருக்கு எந்தவிதத்திலும் உதவிய தில்லை. இருந்தாலும் அவர் என்னை வெறுக்கமாட்டார். ஏற் றுக்கொள்வார்.

"என்ன யோசிக்கிறாய்... முன்கூட்டியே நான் உங்கள் அப்பாவிடம் இதைப்பற்றி சொல்லி வைக்கிறேன்!" என்று கூறி விட்டு சென்றுவிட்டார்.

அவர் கூறியபடியே அந்தப் பெரியவரைச் சந்தித்து, "உங்கள் இளைய மகன் திரும்பி வரப் போகிறான்" என்றார்.

அவருக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

கடந்தகால நிகழ்வுகளையெல்லாம் மறந்தார். எதிர்காலத் தில் நடப்பவை நல்லவையாக அமையட்டும் என்று நினைத்தார்.

மகனை மன்னிக்கத் தயாரானார்.

அதுமட்டுமல்ல... இளையமகன் திரும்பவும் வீடுவந்து சேரப் போகிற செய்தியினை தனது நண்பர்களிடம் சொன்னார்.

ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்து அதில் எல்லோரை யும் கலந்து கொள்ளும்படியாக அழைத்தார். வேலைகள் எல்லாம் அதிரடியாக நடந்தது.

மூத்தமகனுக்கு இதுபற்றி எதுவுமே தெரியாது. அவன் வழக்கம் போல வயலுக்குச் சென்று வேலைகளை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

" தம்பி... உனக்கு விபரம் தெரியுமா...?" என்று எதிரே வந்தவர் கேட்டார்.

" என்ன?" அப்படியென்று கேட்டான்.

" உனது தம்பி எல்லாவற்றையும் இழந்துவிட்டு திரும்பவும் வீடு வந்துசேரப் போகிற செய்தி வந்துள்ளது."

அவனை வரவேற்பதற்காக அப்பா ஒருபெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்! "என்று கூறினார்.

இதைக்கேட்டதும் அந்த மூத்தமகனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

நேராக வீட்டுக்குப் போனான். "அப்பா... இது நியாயமா?" என்று ஆரம்பித்து தனது வார்த்தைகளைக் கூற ஆரம்பித்தான்.

" நீங்கள் சொல்லுகிறபடியெல்லாம் நான் நடக்கிறேன். இதுவரைக்கும் அதை நீங்கள் கொண்டாடியதில்லை... ஆனால் " அவன் உங்கள் சொற்படி கேட்கவில்லை. சொத்தையெல்லாம் அழித்துவிட்டு வருகிறவனுக்கு விருந்து ஏற்பாடு செய்கிறீர்கள். என்னைவிட உங்களுக்கு அவன்மேல் அதிக பாசம் என்று நினைக்கிறேன்!" என்றார்.

"மகனே! நீ என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை" என்று நினைக்கிறேன்.

தவறான பாதையிலே சென்று ஒருவன் திருந்திச் சரியான பாதைக்கு வருகிறான். அது மகிழ்ச்சியான விடயம்... கொண்டா டப்படவேண்டிய விடயம்.

"நீ எப்போதும் சரியான பாதையிலேயே போய்க் கொண்டி ருக்கிறாய். என்கூடவே இருக்கிறாய்...!"

"பாதை ம்ாறிப்போனவன் பக்குவப்பட்டுத் திரும்பி வருகி றான்... அது நல்லதுதான்!" என்று தந்தை கூறினார்.

"வழிதவறிப் போவது கூட நல்லதுதான். திரும்பிவருவதுகூட அதைவிட நல்லது" என்று கூறுகிறார் ஓசோ. ஆனால் எல்லோ ரும் அப்படியில்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்ப்பாணத்தின் பல துறைகளிலிருந்தும் பெண்கள் தொடர்பான பாலியல் முறைப்பாடுகள்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பெண்கள் பாதுகாப்பு இல்லங் களில் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படாமல் பாலியல் துன் புறுத்தல்கள் இடம்பெறுவதாகப் பல பெண்கள் தமக்கு கடிதம்மூலம் அறியத்தந்துள்ளதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற் றில் ஈடுபடுபவர்கள் ஊட கங்கள் வாயிலாக வெளிப் படுத்தப் போவதாக தாம் எச்சரித்ததையடுத்தே இவ் வாறான முறைப்பாடுகள் தமக்கு கிடைத்துள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

மேலும் பாடசாலைகள், அரச திணைக்களங்கள், ஆசிரிய பயிற்சிக்கலா சாலைகள், ஆயுர்வேத வைத்தியசா லைகள், பெண்கள் பாதுகாப்பு நிறு வனங்கள் எனப் பல துறைகளிலி ருந்தும் இந்த முறைப்பாடுகள் தமக் குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(4-6)

# மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் இன்மையால் மக்கள் அவதி

மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் வைத்தியர் இல்லா மையால் நோயாளிகள் சிகிச்சை பெறவந்து பெறமுடியாமல் திரும்பிச் செல்லும் அவல நிலை காணப்படுகின்றது.

கிழவன்குளம், ஒலுமடு, தச்சடம்பன், அம்பகாமம், வன்னி விளாங்குளம், கரிப்பட்ட முறிப்பு உட்பட பல இடங்களிலிருந்தும் இவ் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின் றனர்.

இதனைவிட ஏ9 பிரதான வீதியில் இவ் வைத்தியசாலை அமைந்துள்ளதால் ஊர்திகளினால் விபத்துக்கள் மற்றும் பாம்புக் கடிக்கு இலக்கானவர்களையும் அவசர சிகிச்சைக்காக இவ் வைத்தியசாலைக்கு கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் வைத்தியர் இன்மையால் அங்குள்ள பணியாளர்கள் நோயாளர் களை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கோ அல்லது மல்லாவி பொது வைத்தியசாலைக்கோ அனுப்புகின்ற நிலைமை காணப்படுகின்றது.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறை யில் பயிற்சி பெறுகின்ற 6 வைத்தியர்கள் களப்பயிற்சி 6 மாதங் கள் மேற்கொள்வதற்காக வன்னியிலுள்ள ஒட்டுசுட்டான், அளம் பில், முள்ளியவளை, நட்டாங்கண்டல், துணுக்காய், மாங்குளம் ஆகிய வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

இவர்களில் 3 மாத பயிற்சி முடிவில் மீண்டும் யாழ்.திரும்பி யுள்ளனர். இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி யுள்ளனர்.

எனவே, இதனைக் கருத்திற் கொண்டு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்களும் நோயாளிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-3-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 75 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 |
| தக்காளி | 50 | 70 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 30 | 40 | 20 |
| கரட் | 50 | 70 | 50 |
| பூசணி | 35 | 50 | 30 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 90 | 80 |
| பாகற்காய் | 100 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 70 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 100 | 80 |
| பயற்றங்காய் | 70 | 60 | 70 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 45 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 80 |
| போஞ்சி | 50 | 110 | -- |
| கத்தரிதம்புள்ள | 35 | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 230 | 250 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

*11.10.2011*
*(புரட்டாதி 24, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு*
*பூரணை முழுவதும்*
*உத்தரட்டாதி பிற்பகல் 5.24 மணிவரை*
*இராகுகாலம் 3.02-4.32 மணிவரை*
*சுபநேரம் 10.32-12.02 மணிவரை*
*வல்லிபுர ஆழ்வார் சமுத்திரத் தீர்த்தம், பூரணை விரதம்.*

**மேடம்** தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், உயரதிகாரிகளின் ஒத்துழைப்பு கிட்டும்,சயனசுகக் குறைவான நாள், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**இடபம்** புதிய நண்பர்களின் அறிமுகத் தால் நன்மையுண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள், எடுத்த காரியம் கைகூடும்.

**மிதுனம்** ஆலய வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், இனிய செய்திகள் வந்து சேரும் நாள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரலாம்.

**கடகம்** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் வளர்ச் சிக்காக அதிகம் பாடுவீர்கள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**சிங்கம்** கவலைகள் தீர கண்ணனை வழி பட வேண்டிய நாள், சில செல வு கள் தவிர்க்க முடியாமல் ஏற்பட லாம், உடல் நலனில் கூடிய கவன மெடுக்க வேண்டிய நாள், பிரயா ணங்களில் அவதானம் தேவை.

**கன்னி** சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், மாலை நேரப் பயணங்களால் பிரலபலமானவர் களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண் பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், வியாபார விருத்திக்கு வித்திடு வீர் கள், உடல் நலம் சீராகி உற்சாக மடைவீர்கள், சுவாரஸ்யமான நாள், செய்தொழிலில் மேன்மை யடைவீர்கள்.

**விருச்சிகம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதை யும் உயரும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பிள்ளைகளால் பெருமைப்படுவீர்கள், கண்ணன் வழிபாட்டால் ஆனந்தம் அடைவீர்கள்.

**தனுசு** பெற்றோர் மீது அதிக அக்கறை காட்டுவீர்கள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணை புரிவர், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மகரம்** பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு பலன் பெற வேண்டிய நாள், ஆரோக் கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவி கள் கிடைக்கலாம், பிரயாணத்தால் நன்மையுண்டு.

**கும்பம்** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், இல்லத்தில் மங்களகரமான நிகழ்ச்சிகள் தோன்றுவதற்கான அறிகுறி தோன்றும், வாக்கு மேன்மையால் காரியம் சாதிப் பீர்கள், பண வரவு திருப்தி தரும்.

**மீனம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், ஆரோக்கியம் சீராகி மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், தடைப்பட்ட காரியம் கைகூடும், பெரிய மனிதரின் சந்திப்புண்டு.

வளவன்

# வாரணம் வீதிக்கு மின்சாரம் வழங்க மக்கள் கோரிக்கை

(நல்லூர்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் ஆவரங்கால் மேற்கு வாரணம் வீதிக்கு மின் வழங்குவதற்கு கடந்த 2 மாதங்களுக்குமுன் பறிக்கப்பட்ட மின்கம்பங்கள் இதுவரை நாட்டப்படாது வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் இரவுவேளைகளில் பயணம் செய்ய முடியாத அவல நிலையும் உள்ளது.

அத்துடன் இரவு வேளையில் இவ்வீதியால் பயணிப்போர் விபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-3-134)

# இனந்தெரியாத நபர்களால் கைச்சங்கிலி, மோதிரம் அபகரிப்பு

## தட்டாதெருச் சந்தியில் சம்பவம்

(கொழும்புத்துறை)

மோட்டார் சைக்கிள்களில் வந்த இனம் தெரியாத நபர்களால் நகைக்கடை ஊழியர் ஒருவரின் கைச்சங்கிலி,மோதிரம் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் அண்மையில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவது, நகைக்கடை ஊழியர் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் குறித்த நபரை சுற்றி வளைத்து மேற்குறித்த பொருட்களை அபகரித்து சென்றுள்ளனர்.

இவ் வழிப்பறிக் கொள்ளையர்களால் மக்கள் அச்ச நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-3-51)

# வாணி விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கோட்டைக்காடு-மல்லாகத்திலுள்ள சாளம்பை விழுதுகள் சமூக அபிவிருத்திக் கழகம் நடாத்தும் வாணி விழாவும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணிக்கு கோட்டைக்காடு அ.த.க. பாடசாலை முன்றலில் யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை ஆசிரியை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பேராசிரியர் க.தேவராஜா, சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா, யா/மல்லாகம் மகா வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி லீலா இராஜேந்திரன், வலி.தெற்கு உடுவில் நிர்வாக கிராம அலுவலர் என்.நவரட்ணராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு கௌரவ விருந்தினர்களாக ஜே/229 துர்க்காபுரம் கிராம சேவையாளர் செல்வி மு.விஜிதா, சுன்னாகம் சிந்தகே பண்டார (ஓ.ஐ.சி), சுவிஸ் சாளம்பை மக்கள் ஒன்றிய இணைப்பாளர் க.சுபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-12)

# கட்டப்பிராய் மூன்றாம் கட்டையில் பாலம் அமைக்க ஆழமாக்கப்பட்ட வீதியை புனரமைக்க கோரிக்கை

(இருபாலை)

கட்டப்பிராய் மூன்றாம் கட்டையில் பாலம் புனரமைப்பதற்காக வீதி ஆழமாக்கப்பட்டு நீண்டநாட்களாக புனரமைக்கப்படாததால் பயணம் செய்ய முடியாத அவல நிலை உள்ளது.

இதனால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதோடு விபத்துக்களும் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதால் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே உரியதரப்பினர் மழைக்காலத்திற்கு முன்னர் மேற்குறித்த பாலத்தின் புனரமைப்பு வேலைகளை பூர்த்தி செய்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-3-136)




# விபத்தில் சிக்கி மூவர் காயம்

(அச்சுவேலி)

ஹயல் வாகனமும் துவிச்சக்கரவண்டியும் மோதிய விபத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்ற மூவர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று காலை 8.30 மணிக்கு வரணி வல்லிபுரக்கோவில் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, ஹயஸ் வாகனம் துவிச்சக்கர வண்டியை விலத்தி செல்ல முற்பட்ட போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த மூவரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். (4-3-70)

# அஞ்சல் தினம் கடைப்பிடிப்பு

(நல்லூர்)

மானிப்பாய் அஞ்சல் அலுவலகத்தால் உலக அஞ்சல் தினம் நாளை புதன் கிழமை காலை 9 .மணிமுதல் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு பிரதேச மக்கள் மத்தியில் அஞ்சல் சேவை விழிப்புணர்வு செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

அப்பிரதேசத்திலுள்ள மக்களின் வீடுகளுக்கு தபாலக. பணியாளர்கள் நேரடியாக சென்று அஞ்சல் சேவை செயற்பாடுகள் சம்பந்தமான விளக்கங்களை அளிக்கவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் உள்ள ஏனைய தபாலகங்களிலும் தபால் பணியாளர்களின் அஞ்சல் தின பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (4-3-134)

# ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் புரட்டாதி மாத இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் நவராத்திரியும் நலம் அருளும் நாயகியர்களும் விரதத்தின் மகிமை, திருமந்திரம் கூறும் சிவாகமம் ,அன்பும் இறையியலும், சிறுவர் கதைகள், இந்து வழிபாட்டுக்குரிய பஞ்ச பூத சிவஸ்தலங்கள் போன்றன உள்ளடங்கியுள்ளன. (4-12)

# கண்காட்சி

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பொது நூலகத்தினரால் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் தொடர்ந்து இரு நாட்களும் காலை 9 மணி தொடக்கம் பி.ப 5.30 மணிவரை சாவகச்சேரி நகராட்சி மன்ற வளாகத்தில் அமைந்துள்ள பிரதான நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு நகராட்சி மன்ற தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (4-3-29)

# நவாலி கிழக்கு இத்தியடிபிள்ளையார் ஆலய பகுதியில் மதுப் பிரியர்களின் அட்டகாசம்

(நவாலி)

நவாலி கிழக்கில் அமைந்துள்ள இத்தியடி பிள்ளையார் கோவில் மதுப்பிரியர்களின் அட்டகாச இடமாக மாறியுள்ளது.

இங்கு தினமும் மதுவுடன் கூடும் இளைஞர்கள் மது அருந்தி விட்டு ஆடல் பாடல்களில் ஈடுபடுவதும் பின்பு போதை தலைக்கேறியவுடன் வயல்வேலைக்கு செல்பவர்கள், கால்நடை மேய்ப்பவர்களுடன் சேட்டை விடுவதோடு கோஷ்டி மோதலில் ஈடுபடுகின்றனர்.

அண்மையில் கூட இருகுழுக்கள் கோஷ்டி மோதலில் ஈடுபட்டு டொல்பின் வாகனம் மற்றும் மோட்டார் வாகனம் சேதமடைந்ததுடன்இளைஞர்களுக்கும் பலத்தகாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது காலபோகச் செய்கை ஆரம்பித்துள்ளதால் அப்பகுதி வயல் வேலைகளுக்குச் செல்லவேண்டிய தேவையுள்ளது.

அதனால் அப்பகுதியில் அவ்வீதியால் செல்வோர் பெரும் அசௌரியங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே இவ்விடயத்தில் உள்ள சமூக அமைப்புக்கள், சமூக பெரியார்கள் இவ்விடயத்தைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-3-26)

# பரிசளிப்பு விழா


(சுன்னாகம்)

யா/ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் த.வா மதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ. குபேரநாதன், சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (4-12-54)





இலங்கை வங்கியின் விளையாட்டு கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் இலங்கை வங்கியின் தலைவர் காமினி விக்கிரமசிங்க உரையாற்றுவதையும் நிகழ்வில கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)



வடமாராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்திருவிழா நேற்றைய தினம் நடைபெற்றது. இதில் வல்லிபுர ஆழ்வார்வார் தேரில் பவனி வருவதையும் பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை தீர்ப்பதற்காக அங்கப்பிரதட்சனை செய்வதையும் மற்றும் தூக்குக் காவடி எடுத்து வருவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

# வாகரை பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை நிறுத்துங்கள்

## யோகேஸ்வரன் எம்.பி. ஜனாதிபதிக்கு மகஜர்

(கொழும்பு)

வாகரை பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்கள குடியேற்ற செயற்பாட்டை அதாவது ஓமடியாமடுவில் மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்ற முயற்சியை உடன் தடுத்து நிறுத்துமாறு தங்களிடம் அன்பாக வேண்டுகின்றோம். இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த அவசர மகஜரில் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் ஓமடியாமடு கிராமத்தில் தற்போது மகாவலி அபிவிருத்தி திட்ட பூமி வழங்கல் என்ற வகையில் அப்பகுதிக்கு வந்துள்ள சிங்கள அதிகாரி ஒருவர் 30 சிங்கள குடும்பங்களை அக்கிராமத்தில் குடியேற்றியுள்ளார்.

இக்குடியேற்றம் சார்பாக அங்கு வசிக்கும் தமிழ் மக்கள் குறித்த அதிகாரியிடம் தமிழ் பகுதியின் நடுவில் இவ்வாறு குடியேற்ற வேண்டாம் என கூறியபோது உங்களுக்கு கஷ்டமாக இருந்தால் நீங்கள் இப்பகுதியிலிருந்து வெளியேறுங்கள் என தமிழ் மக்களுக்கு அவ்வதிகாரி கருத்து தெரிவித்துள்ளார்.

இவ்வேளை கடந்த சில காலமாக சிங்கள மக்களை தமிழ் பகுதியில் குடியேற்றும் வகையில் பல நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றது.

இச்செயற்பாடானது வெந்த புண்ணில் வேல் நுழைப்பது போன்றும் துன்பத்தை நீண்ட காலமாக அனுபவித்துக்கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு மேலும் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் பொலநறுவை மாவட்டத்தில் தேவையான காணிகள் இருக்கும் போது மட்டகளப்பு மாவட்டத்தில் சிங்கள மக்களை தமிழர் குடியிருப்பு மத்தியில் குடியேற்றுவதால் இன முரண்பாடு வலுவடைய சந்தர்ப்பத்தை தோற்றிவிக்குமே தவிர இன ஒற்றுமையை ஒரு போதும் வளர்க்காது.

அம் மகாவலி அபிவிருத்தி அதிகாரிகள் இச்செயற்பாட்டை எங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது.

ஆகவே வாகரை பிரதசத்தில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சிங்கள குடியேற்ற செயற்பாட்டை அதாவது ஓமடியாமடுவில் மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்ற முயற்சியை உடன் தடுத்து நிறுத்துமாறு தங்களிடம் அன்பாக வேண்டுகின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-2)

## கலந்துரையாடல்

மனித உரிமைகள் அமைப்பின் யாழ். மாவட்ட சமாதான நீதிவான்களின் அனைத்து அங்கத்தவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு குருநகரிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் பேராசிரியர் ஜெயந்தகளுபோவல கலந்து கொள்ளவுள்ளார்.

எனவே, அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (4-12)

## முல்லேரியா சம்பவத்தில் மேலுமொருவர் உயிரிழப்பு

(கொழும்பு)


முல்லேரியாவில் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒரு நபர் உயிரிழந்துள்ளார்.

அவசர சிகிச்சைப் பிரிவில் அனு மதிக்கப்பட்டிருந்த இவர் நேற்று முன் தினம் இரவு உயிரிழந்துள்ளார் என தேசிய வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ஆரியவங்ச தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்ற பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவும் மேலும் இரு வரும் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

### பி.எஸ்.எல்.வி-18

## செய்மதி நீர், நில ஆய்வுக்காக விண்ணில் ஏவப்படவுள்ளது



நீர், நில ஆராய்ச்சிக்காக விண்ணில் ஏவப்படவுள்ள பி.எஸ்.எல்.வி -18 ரொக்கெட் 4 செயற்கைக் கோள்களுடன் விண்ணில் செலுத்தப்படவுள்ளது. இவற்றில் மூன்று செயற்கைக்கோள்கள் கல்வி துறைக்கான சிறிய ரக செயற்கைக் கோள்களாகும்.

இஸ்ரோவின் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து நாளை புதன்கிழமை ஏவப்படவுள்ள பி.எஸ்.எல்.வி.-18 ரொக்கெட்டின் 50 மணி நேர கவுண்ட் டவுன் நேற்றுக் காலை 9 மணிக்கு தொடங்கியது. மேலும் நாளை காலை 11 மணிக்கு இந்த ரொக்கெட் விண்ணில் ஏவப்படும் என இஸ்ரோ செய்தி தொடர்பாளர் எஸ்.சதீஷ் தெரிவித்துள்ளார். (4-2)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள் -2010

1. வணிக முதற் தேர்வு - 2010 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக முதற் தேர்வு - 2010 (பழைய பாடத்திட்டம்)
3. வணிக இரண்டாம் தேர்வு -2010 (புதிய பாடத்திட்டம்)
4. வணிக பகுதி- I -2010 (பழைய பாடத்திட்டம்)
5. வணிக மூன்றாம் தேர்வு -2010 (புதிய பாடத்திட்டம்)
6. வணிகமாணி பகுதி II - 2009 & 2010 (பழைய பாடத்திட்டம்)
7. வணிகமாணி பகுதி III - 2009 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை 03.11.2011 (வியாழக்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 01. | வணிக முதற் தேர்வு-2010 (புதிய பாடத்திட்டம்) | 03.11.2011-12.11.2011 | 9.00-12.00 |
| 02. | வணிக முதற் தேர்வு- 2010 (பழைய பாடத்திட்டம்) | 03.11.2011-12.11.2011 | 9.00-12.00 |
| 03. | வணிக இரண்டாம் தேர்வு -2010 (புதிய பாடத்திட்டம்) | 14.11.2011-21.11.2011 | 9.00-12.00 |
| 04. | வணிகமாணி பகுதி- I -2010 (பழைய பாடத்திட்டம்) | 14.11.2011-21.11.2011 | 9.00-12.00 |
| 05. | வணிக மூன்றாம் தேர்வு-2010 (புதிய பாடத்திட்டம்) | 22.11.2011-28.12.2011 | 9.00-12.00 |
| 06. | வணிகமாணி பகுதி II- 2009 & 2010 (பழைய பாடத்திட்டம்) | 22.11.2011-28.11.2011 | 9.00-12.00 |
| 07. | வணிகமாணி பகுதி III-2009 (பழைய பாடத்திட்டம்) | 29.11.2011-05.12.2011 | 9.00-12.00 |

புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 24.10.2011 (திங்கட்கிழமை) தொடக்கமும், பழைய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 27.10.2011 (வியாழக்கிழமை) தொடக்கமும், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
10.10.2011

(சி/4698)

# உள்ளூராட்சி மன்ற தலைவர்களின் பெயர்களை அறிவிக்க கோரிக்கை

(கொழும்பு)

நாளை புதன்கிழமைக்குள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தலைவர்களின் பெயர் களை தேர்தல் செயலகத்திற்கு அறிவிக்குமாறு சம்பந்தப்பட்ட கட்சிகளின் செயலாளர்களிடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள் ளது.

மேயர், பிரதி மேயர், தலைவர் மற்றும் உபதலைவர் ஆகிய பதவிகளுக்காக நியமிக்கப்படுகின்றவர்களின் பெயர்களை தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்பிவைக்க அந்தந்த கட்சிகளின் செயலாளர் கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஜே.ஏ.எஸ்.பீ. ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்க்கட்சித் தலைவராக பெய ரிடப்படுகின்றவர்களின் பெயர்களையும் தேர்தல்கள் செயலகத்திற்கு அறிவிக்க வேண்டும் என அவர் கூறினார்.

இதன் பிரகாரம் அனைத்து பெயர்களையும் உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தலை இவ்வார இறுதிக்குள் வெளியிட முடியும் என தேர்தல்கள் செயலகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (4-2)



நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவிலில் பொதுநூலகம் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நடத்திய தனிமனித ஆளுமையை விருத்தி செய்தலுக் கான பயிற்சிப்பட்டறை அண்மையில் கோண்டாவில் மேற்கு வேதபாராயண கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இப் பயிற்சி பட்டறையில் வளவாளராகக் கலந்து கொண்ட பல்துறை வித்தகர் எஸ்.மணிமாறனுடன் பயிற்சியாளர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# தூக்குத் தண்டனை கைதிகளின் விசாரணைகளை வேறு நீதிமன்றிற்கு மாற்றுவதற்கு கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

ராஜீவ் கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட மூவரின் மேல்முறையீட்டு மனுவை சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து வேறு நீதிமன்றத்துக்கு மாற்றுவதற்கு தமிழக அரசு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு சார்பில் கூடுதல் சட்டத்தரணி ஜெனரல் குருகிருஷ்ணகுமார் நேற்று உச்ச நீதிமன்றத்தில் பதில் மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில் ராஜீவ் கொலை வழக்கில் தங்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்து செய்யக் கோரும் பேரறிவாளன் உட்பட மூவர் தொடர்ந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் விசாரிப்பதற்கு இடையூறு நேரக்கூடும் என்ற குற்றச்சாட்டை தமிழக அரசு மறுத்துள்ளது.

முன்னதாக இந்த வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றக்கோரி ஜி.கே.மூப்பனார் பேரவை என்ற அமைப்பின் தலைவர் எல்.கே.வெங்கட் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அம் மனுவில் ராஜீவ்காந்தி படுகொலை தொடர்பான வழக்கில் முருகன், டி.சுந்தரராஜா என்ற சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரின் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது. அவர்களது கருணை மனுக்களை ஜனாதிபதியும் நிராகரித்துவிட்டார்.

அம் மூவருக்கும் கடந்த செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி மரண தண்டனை நிறைவேற்றப்பட இருந்தது. ஆனால், அவர்களது தூக்கு தண்டனையை மறுபரிசீலனை செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாளில் நீதிமன்ற வளாகத்தில் சுமார் 5 ஆயிரம் பேர் கூடி கொலையாளிக்கு ஆதரவாக கோஷமிட்டனர். இந்தச் செயல் நீதிமன்ற நடவடிக்கைக்கு இடையூறாக அமைந்தது.

ராஜீவ் கொலையாளிக்கு மரண தண்டனையை நிறைவேற் றுவது கால தாமதம் ஆவதால் மரண தண்டனையைக் கைவிட வேண்டும் என்று தமிழகத்தில் தற்போது ஆட்சியில் உள்ள அரசும் வலியுறுத்தி வருகிறது. இதே நிலைப்பாட்டை முந்தைய அரசில் இருந்தவர்களும் கொண்டுள்ளனர். இதனை பத்திரிகைகளும் தனியார் தொலைக்காட்சிகளும் வெளியிட்டு வருகின்றன.

தமிழக அரசின் இந்தச் செயற்பாடு நீதிபதிகள் மீது செல்வாக்கு செலுத்தக் கூடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இதேபோல் பல்வேறு அமைப்புகள், அரசியல் கட்சிகள் மரணதண்டனைக் கைதிகளுக்கு ஆதரவாகப் பேசி வருகின்றன.

இத்தகைய சூழலில் மரண தண்டனையை இரத்து செய்யக்கோரும் வழக்கை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் விசாரிப்பதற்கு இடையூறு நேரக்கூடும் என்ற கவலை ஏற்பட்டுள்ளது. ஆகவே மூவரது மனு மீதான விசாரணையை வேறு நீதிமன்றத்துக்கோ அல்லது உச்ச நீதிமன்றத்துக்கோ மாற்ற வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (4-2)

# களனி கங்கையில் நீராடிய இருவர் உயிரிழந்தனர்

(கொழும்பு)

களனி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உதானமாவத்தை முனையில் உள்ள களனி கங்கை பகுதியில் நீராடச் சென்ற இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ள நிலையில் நீரில் மூழ்கியவர்களை நேற்று காலை காப்பாற்றச் சென்ற ஒருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நேற்று காலை 8 மணியளவில் மூவரின் சடலமும் கரையொதுங்கியுள்ளது.

சடலங்கள் ராகம வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. 19, 27 மற்றும் 59 வயதுடைய நபர்களே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். (4-2)

# இலக்கியவிழா

வடமாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இலக்கிய விழா எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் மன்னாரில் நடைபெறவுள்ளதாக வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்விழாவானது கடந்த 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டு திகதி மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-12)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி பற்றிமாமலர் அன்ரன்ஜோர்ச் விக்னராசா



யா/ ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலையில் சிறந்த கல்விச் சேவை ஆற்றி அலரிமாளிகையில் ஜனாதிபதியிடம் "பிரதீபா பிரபா 2011" விருதினைப் பெற்ற ஆசிரியைக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

(6366)


# இயல், இசை அரங்க விழா

(யாழ்ப்பாணம்)

பி.டபிள்யூ.அரியரட்ணம் ஞாபகார்த்தமாக அகில உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணக் கல்லூரி பிரதம பாடசாலையினரால் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான தரம்-01- தரம்-05 மாணவர் பங்குபற்றும் மாபெரும் சிறுவர் இயல், இசை, அரங்கவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பாக எமது கல்லூரியுடன் தொடர்பு கொண்டு தங்களது பங்களிப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு யாழ்.வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கேட்டுக் கொள்கிறார். (4-12)


உ

புரட்டாதி கடைசிச் சனிக்கிழமையை முன்னிட்டு

சர்வதேச இந்துமத குருபீடம்

சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம் ஏற்பாட்டில்

சனீஸ்வர மஹாயாகம்

இடம்:- ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானம், தம்பையா சத்திரம்–கொழும்பு–13

காலம்:- 15.10.2011 புரட்டாதிக் கடைசிச் சனிக்கிழமை

நேரம்:- காலை 8 மணி முதல் 11 மணிவரை, மாலை 5 மணிமுதல் 8 மணிவரை

"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி"

"ஆன்மீக அருள்ஜோதி கலாநிதி"

ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் J.P

தலைமையில் மஹாயாகம் நடைபெறும்.



நேரில் கலந்து கொள்ள முடியாத அடியார்கள், தங்கள் பெயர், குடும்பத்தினர் பெயர், நட்சத்திரங்களையும், (விரும்பும்- காணிக்கையையும்) கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தால் தங்களின் பெயர்களும் சனீஸ்வர மஹாயாக பூஜையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, வீபூதிப் பிரசாதம், யாகரக்ஷை, காவல்நூல் என்பன அனுப்பிவைக்கப்படும்.



S.I.S.SIVACHCHARYAR, 30, ST ANTHONY'S MW, COLOMBO-13.

T.P.: 011-2433468, 077 9930140


(6373)


வலிகாமம் கிழக்கு- கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் சிறுவர், முதியோர், மாற்று வலுவுடையோருக்கான விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கோப்பாய் கோட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத் தலைவர் ந.ரகுலாகரன் உரையாற்றுவதையும் பொதுமக்களுக்கான ஒருநாள் மருத்துவ சேவை நிகழ்வை பிரதேச செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பிரதேச செயலர் ம.பிரதீபன் ஏனைய விருந்தினர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# கட்சியின் தனித்துவத்தை எடுத்துக்காட்டியுள்ளீர்கள

## தேர்தல் வெற்றியில் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



கல்முனை மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற உதவியதன் ஊடாக மீண்டும் அங்கு கட்சியின் தனித்துவ அடையாளத்தை நிலை நிறுத்துவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளனர். அத்துடன் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் முன்னர் வெற்றி பெற்ற ஆசனங்களை கட்சி தக்க வைத்துக் கொண்டுள்ளது.

இவ்வாறு மூன்றாம் கட்டமாக நடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்திருப்பதாவது, நடைபெற்ற தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வெற்றி பெறச் செய்த அனைவருக்கும் தனிப்பட்ட முறையிலும் கட்சியின் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

முஸ்லிம் அமைச்சர்கள் சிலரின் பொய்ப் பிரசாரங்களுக்கு மத்தியிலும் கல்முனை மாநகர சபையை எமது கட்சி கைப்பற்றுவதற்கு உன்னதமான பங்களிப்பைச் செய்துள்ளமைக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. அவ்வாறே கட்சி போட்டியிட்ட ஏனைய உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆசனங்களைத் தக்க வைத்துக் கொள்ள உதவிய வாக்காளர்களையும் நாம் பெரிதும் மதிக்கின்றோம்.

கொழும்பு, கண்டி, நீர்கொழும்பு, மாத்தளை ஆகிய மாநகர சபை தேர்தல்களிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர். கொழும்பு மாநகர சபையில் எம் உறுப்பினர்கள் இருவரை பெற்று இருவரை உடனின்னடைவைச் சந்திக்க நேர்ந்துள்ள போதிலும் கொழும்பின் சில பகுதிகளில் வாழும் சிறுபான்மை மக்கள் மத்தியில் அண்மைக் காலமாக நிலவிவரும் பீதி மனப்பான்மையின் பிரதிபலிப்பாகவே அதனைக் கருத வேண்டியிருக்கின்றது.

அந்த மக்கள் எதிர்நோக்கும் அச்சம், சந்தேகம் என்பன பற்றி போதியளவு தெளிவுபடுத்தப்பட்டு அவற்றைக் களைவதற்குரிய வழிவகைகளில் மேலும் கூடுதலான கரிசனையும் கவனமும் செலுத்தப்பட்டிருக்க வேண்டுமென்பது எமது அபிப்பிராயமாகும்.

ஜனாதிபதி மிகவும் தெளிவான நம்பிக்கையூட்டக் கூடிய நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார். கட்சியின் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு உறுதுணையாக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும். (4-2)

## 58 வருடங்களின் பின்னர்

# கண்டி மாநகரின் ஆட்சியை ஐக்கிய தேசியக்கட்சி இழந்தது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டையாக கடந்த 58 வருடங்களாக இருந்து வந்த கண்டி மாநகர சபையின் ஆட்சி இம்முறை முதற் தடவையாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வசமாகியுள்ளது.

அத்துடன் கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற மூன்று சபைகளுக்கான தேர்தலில் முதல் தடவையாக கண்டி மாநகரசபை உட்பட மூன்று சபைகளையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றியுள்ளது.

கண்டியில் குண்டசாலை பிரதேச சபை மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேசசபை என்பவற்றின் அதிகாரித்தையும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கண்டி மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 23 ஆயிரத்து 189 வாக்குகளைப் பெற்று 13 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 20 ஆயிரத்து 87 வாக்குகளைப் பெற்று 10 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆயிரத்து 248 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளது.

கங்கவட்ட கோரளை பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14 ஆயிரத்து 83 வாக்குகளுடன் 8 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 9 ஆயிரத்து 418 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

குண்டசாலை பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 34 ஆயிரத்து 488 வாக்குகளைப் பெற்று 14 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 16 ஆயிரத்து 934 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களையும் சுயேட்சைக்குழு 1 மற்றும் ஜே.வி.பி. என்பன தலா 1 ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன. (4-2)

# கலைப்பீட மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

கலைப்பீட மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டம் இம்முறை கலைப்பீடங்களில் உள்வாங்கப்படும் மாணவர்களுக்கு நான்கு புதிய பட்டப்படிப்பு கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

இதனடிப்படையில் ஆங்கிலக் கல்வி, தகவல் தொழிநுட்பம், சுற்றுலாத்துறை மற்றும் மும்மொழிகள் ஆகிய விசேட பாடத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் புதிய பாடத்திட்டங்களை இந்த வருடத்தில் நடைமுறைப்படுத்துவதாகவும் அமைச்சர் கூறினார்.

புதிய பாடத்திட்டங்களோடு மேலதிகமாக வரலாறு, அரசியல், விஞ்ஞானம் அல்லது சமூக விஞ்ஞானம் என்பவற்றையும் கற்பதற்குரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (4-2)

# கல்முனை மாநகரசபைத் தேர்தலில்

# தமிழர்களின் வாக்குகள் பிரிக்கப்பட்டமையாலேயே இரண்டு ஆசனங்களை இழந்திருக்கின்றோம்

(கொழும்பு)



கல்முனை மாநகரசபை தேர்தலில் தமிழர்களின் வாக்குகள் பிரிக்கப்பட்டமையினாலேயே ஏற்கனவே இருந்த இரண்டு ஆசனங்களை இழக்கவேண்டி ஏற்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கல்முனை மாநகரசபை தேர்தலில் பெரும் எண்ணிக்கையான சுயேட்சை குழுக்களை போட்டியிட செய்து தமிழர்களின் வாக்குகளை பிரிப்பதற்கு இம்முறை கடும் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இம்முறை தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைப் பிரிப்பதற்கென்றே சுயேட்சை குழுக்கள் பல களத்தில் இறக்கப்பட்டன.இதனாலேயே ஏற்கனவே நம்மிடமிருந்த ஆறு ஆசனங்களில் இரண்டை இழந்து தற்போது நான்கு ஆசனங்களைப் பெற்றுள்ளோம் என்றார்.

நடைபெற்று முடிந்த தேர்தல் குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர் இந்த தேர்தல் முடிவுகள் தெளிவான செய்தி ஒன்றை அரசாங்கத்திற்கு கொடுத்துள்ளது.தமிழ் மக்களின் நம்பிக்கையை வெல்ல வேண்டுமாயின் அரசாங்கம் மேலும் நம்பிக்கையூட்டும் செயற்பாடுகளை முன்வைக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டியுள்ளது. (4-2)

# இந்து மாமன்றத்தின் கட்டுரை போட்டியில் பரிசில் பெறுவோர்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்திய முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் நினைவு தின கட்டுரைப்போட்டிகளின் முடிவு கள் அகில இலங்கை இந்துமாமன்ற சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மேற்பிரிவு, மத்தியபிரிவு, கீழ்ப்பிரிவு ஆகியவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களினதும் ஆறுதல்பரிசு பெறுபவர்களினதும் விபரம் வருமாறு,

**மேற்பிரிவு**

ஜெ. காயத்திரி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), எஸ்.சத்தியபாலன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி), நா.ஜனுஷா பிரியதர்ஷினி (நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி)

**ஆறுதல் பரிசுகள்**

லோ.ஜயந்தா (பெரியகல்லாறு மத்திய கல்லூரி), கே.தீபிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**மத்திய பிரிவு**

கி.சுவாஸ்திகா (புலோலி மெ.மி.த.க. பாடசாலை), சி.இரேணுஹாசினி (நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி), அ. அர்சனா (வாழைச்சேனை இந்துக் கல்லூரி)

**ஆறுதல் பரிசுகள்**

சு.புவித்தா (புலோலி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஜெ.கிருஜா (புலோலி மெ.மி.த.க.பாடசாலை)

**கீழ்ப்பிரிவு**

கோ.அம்ருதா (மானிப்பாய் சத்தியசாய் பாடசாலை), ச.சிவன்யா (பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), ர.சுஜேன் (புலோலி மெ.மி.த.க.பாடசாலை)

**ஆறுதல் பரிசுகள்**

கி.சிந்துஜா (நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி), சி.சுபஸ்ரீபன் (புலோலி மெ.மி.த.க.பாடசாலை) (4-12)





சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும் இணைந்து நடத்திய நவராத்திரி விழா அண்மையில் திருநெல்வேலியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண முன்பள்ளி கல்விப் பணிப்பாளர் செல்வி. ஜெயா தம்பையா சிறார் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் சிறார்களின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யூ.என்.டி.பி, என்.ஆர்.சி நிறுவன அனுசரணையுடன் வடமாகாணத்திலுள்ள பிரதேச சபைத் தலைவர்கள், பிரதித் தலைவர்கள், பிரதிநிதிகள், உத்தியோகத்தர்களுக்கான நிர்வாகச் செயற்பாடு சம்பந்தமான மூன்று நாட்கள் பயிற்சிப் பட்டறை ஒன்று நடைபெற்று வருகின்றது.

இப்பயிற்சிப் பட்டறை நேற்றைய தினம் ஆரம்பமாகி நாளை புதன்கிழமை வரை கொழும்பிலுள்ள இலங்கை தேசிய மன்றக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-12-84)

## அந்தர் யோகம்

(யாழ்ப்பாணம்)

தாவடி கொக்குவிலிலுள்ள இராமகிருஷ்ணமிசனில் பூரணை சற்சங்க நிகழ்வான அந்தர் யோகம் இன்று காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை கொழும்பு இராமகிருஷ்ண மிசனின் மூத்த துறவி ஶ்ரீபதி சுவாமி இராஜேஸ்வரானந்தரினால் நடத்தப்படவுள்ளது.

இதில் மந்திர பாராயணம், பகவான் ஶ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் அமுத மொழிகள் பற்றிய வாசிப்புக்கள், சிறப்பு ஆன்மீக உரை போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. (4-2)

## பொதுக்கூட்டம்

(பொற்பதி)

வெற்றிலைக்கேணி விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் எதிர்வரும் 14 ஆம் திகதி பி.ப 4 மணிக்கு வெற்றிலைக்கேணி றம்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (4-3-64)

# தேர்தல் முடிவுகளின்படி நாட்டு மக்கள் ஜனாதிபதியுடனேயே நிற்கின்றனர்

## சர்வதேசத்தை உதவ கோருகின்றார் அமைச்சர் சமரசிங்க

(கொழும்பு)

**தேர்தலில் அரசாங்கத்துக்கு கிடைத்துள்ள வெற்றியின்மூலம் நாட்டு மக்கள் ஜனாதிபதியுடன் இருக்கின்றனர் என்பது தெளிவாகியுள்ளது.**

**இதன்மூலம் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை பெரும்பாலான மக்கள் அங்கீரித்துள்ளனர் என்ற செய்தி சர்வதேசத்துக்கு சென்றுள்ளது.**

**எனவே இதனைப் புரிந்து கொண்டு எமக்கு உதவிகளை வழங்க சர்வதேசம் முன் வரவேண்டும் என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் முடிவுகள் தொடர்பில் தகவல் வெளியிடுகையிலேயே அமைச்சரும் மனித உரிமைகள் விடயங்கள் குறித்த ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மஹிந்த சமரசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் கூறுகையில், 23 சபைகளுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்யும் நோக்கில் நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் அரசாங்கம் 21 சபைகளை கைப்பற்றி அமோக வெற்றியீட்டியுள்ளது.

இதன்மூலம் நாட்டு மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனேயே இருக்கின்றனர் என்பதை வெளிக்காட்டியுள்ளதுடன் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களையும் அங்கீகரித்துள்ளனர். மக்கள் மிகப்பெரிய ஆதரவை எமக்கு வழங்கியுள்ளனர்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி நீண்டகாலமாக தோல்வியடையாத மற்றும் அக்கட்சியின் கோட்டையாக விளங்கி வந்த பல உள்ளூராட்சித் மன்றங்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாரிய வெற்றியை ஈட்டியுள்ளது.

அதாவது தேர்தல் ஊடான மக்களின் இந்த தீர்ப்பு மூலம் மக்கள் எம்மை மேலும் தைரியப்படுத்தியுள்ளனர்.

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. ஆனால் எமது கட்சிக்கான வாக்கு வீதம் உயர்ந்துள்ளது.

கொழும்பில் அரசாங்கம் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இந்த வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் தொடரும் என்றார். (4-2)

# தலைமன்னார் பகுதியில் மீனவரின் சடலம் மீட்பு

(கொழும்பு)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியிலுள்ள புதுக்குடியிருப்பு தென்கடற்கரையோரத்தில் மீனவரொருவரின் சடலம் நேற்று முன்தினம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த எ.முகமது சுல்த்தான் (வயது 63) என்பவரது சடலமெனஏனைய மீனவர்கள் அடையாளம்காட்டினர்.

குறித்த மீனவர் வியாபார நோக்கமாக இக்கடற்கரை பகுதிக்கு வழமையாக வந்து செல்வதாகவும் அவ்வாறே நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் குறித்த மீனவர் இக்கடற்கரைப் பகுதிக்கு வியாபார நோக்கத்திற்காக வந்தபோதே உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.சடலத்தை பார்வையிட்ட மன்னார் நீதிவான் கே.ஜீவராணி, பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (4-2)


Hatton National Bank

Two Decades of Microfinance in Sri Lanka

**அடகுப் பொருட்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, சாவகச்சேரி, பருத்தித்துறை, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 10.08.2010 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 15.10.2011 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல 212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

(அ-4697)

ஹற்றன் நஷனல் வங்கி

HNB


# நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான நம்பிக்கையே தேர்தல் வெற்றி

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)



நடந்து முடிந்த 23 சபைகளுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ள மிகப் பெரிய வெற்றியானது அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மீதான மக்களின் நம்பிக்கையின் வெளிப்படுத்தலாகும் என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

கவலைக்குரிய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளபோதிலும் இதன்மூலம் தற்போதைய தேர்தல் முறைமையின் கீழான விருப்பு, வாக்கு முறைமையின் குறைபாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் முடிவுகள் தொடர்பில் பிரதமர் டி.எம்.ஜயரட்ண விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கம் முன்கொண்டு செல்கின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு கிடைத்துள்ள பாரிய அங்கீகாரமாகவே நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ள மிகப் பெரிய வெற்றியை பார்க்கின்றோம்.

58 வருடங்களுக்கு பின்னர் கண்டி மாநகர சபையின் நிர்வாக அதிகாரம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கிடைத்துள்ளது.

மஹிந்த சிந்தனை எதிர்கால வேலைத் திட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல மக்களின் ஆணை இம்முறையும் கிடைத்துள்ளது என்றார்.(4-2)

# விவசாயி நமது வளர்ப்புத் தாய்



25 வருடங்களுக்கு முன் ஒரு கிராமத்துக்குச் சென்றால் மண்ணை உழும்போதும், விதை விதைக்கும் போதும், களையெடுக்கும் போதும் அதற்கெனப் பாடல்கள் இருந்தன. அறுவடைசெய்யும்போது அதற்கென ஆடல், பாடல்கள் இருந்தன. வந்து விதைத்தார்கள். நீங்களும் மற்றவர்கள் தோட்டத்திற்குச் சென்று விதைத்தீர்கள். அப்போது "நாம்" என்கிற ஒற்றுமை இருந்தது. இப்போது "நான்" என்று ஆகிவிட்டது. அந்த ஒற்றுமை காணமல் போய் எல்லா வேலைகளையுமே நீங்களே நன்றாகச் சாப்பிட்டு ஆரோக்கியமாக இருக்கிறோம். நம் குழந்தைகள் நன்றாக வளர்ந்து படிக்கிறார்கள். ஓர் உயர்ந்த நிலையில் வாழ்க்கை நடத்து கிறோம். அவ்வளவுதான்.

எந்த ஓர் அடிப்படையும் இல்லாமல் சிலர் ஒரு தொலைபேசியை

## சமூகமே ஒற்றுமையுடன் ஆடிப்பாடி விவசாயம் செய்யும் அந்த பழைய பண்பாட்டை திரும்பக் கொண்டுவரவேண்டும்



அப்படி இருந்தபோது வெயிலில் வேலை செய்வதற்கு ஒரு உற்சாகம் தெம்பு வந்தது. விதை விதைக்கும் காலத்தில் ஊரில் இருப்பவர்கள் அனைவரும் உங்கள் தோட்டத்திற்கு செய்ய வேண்டுமென்கிற நிலை வந்துவிட்டது. இப்போது விவசாயம் என்பது மிகவும் சிரமமாகி விட்டது. ஏனெனில் அதைத் தொழில்போல நடத்துவதற்கு முயற்சி செய்கின்றோம். விவசாயத்தைத் தொழில் போல நடத்த முடியாது. சமூகத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்து செய்தால்தான் சந்தோஷமாக ஆனந்தமாக அதைச் செய்ய முடியும். நீங்கள் என்ன செய்தாலும், எத்தனை புகார் மனுக்கள் தந்தாலும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். விவசாயத்தில் தொழில் நிறுவனத்தைப்போல் நிச்சயமாகச் சம்பாதிக்க முடியாது. நமக்குக் கிடைக்கிற மகிழ்ச்சி என்னவென்றால், நிலத்தில் வேலை செய்கிறோம். பூமித்தாய்க்கும் நமக்கும் ஒரு தொடர்பும் இருக்கிறது.

மட்டும் வைத்துக்கொண்டு உட்கார்ந்தபடியே கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள். நீங்கள் அது போல சம்பாதிக்க முடியாது. அது போல சம்பாதிக்க விவசாயத்திற்கு வரவில்லை. நமக்கு இந்தப் பூமியிடம் ஒரு தொடர்பு இருக்கிறது. நமக்கு இயற்கையோடு ஒரு உயிர்த்தொடர்பு நிலவுகிறது. ஆனால், அந்த உயிர்த் தொடர்பை நாம் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளவில்லை. தொன்று தொட்டு வந்த நம் கலாசாரத்தில் எப்படி ஒரு விவசாயி இருக்க வேண்டும், உழைக்க வேண்டும், ஆட வேண்டும் என்ற விடயங்கள் மறந்து விட்டன. இந்தப் பண்பாட்டை நாம் திரும்பக் கொண்டுவர வேண்டும். இதற்காக ஈஷா யோகமையத்தில் ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்.

தமிழ் நாட்டின் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு விதமான நாட்டுப் புறப்பாடல்கள், நடனம் போன்றவை இருந்து வந்தன. அவற்றையெல்லாம் சேகரித்து வைத்திருக்கிறோம். 25 ஜீப்புகளில் ஒவ்வொரு ஜீப்பிற்கும் நாட்டுடப்புற இசை,நடனம் தெரிந்த ஐந்து இளைஞர்களைக் கொண்டு அந்தப்பகுதிகளில் இருந்து வந்த இசையை, நடனத்தை அங்கே வழங்கத்திட்டமிட்டிருக்கிறோம். கல்வி என்பது ஏ.பி.சி கற்றுக் கொடுப்பது மட்டுமல்ல. நாம் முக்கியமாக யோகசாலை, உடற் பயிற்சிக் கூடம் போன்றவற்றை அமைத்தால், மாலை வேளையிற் செய்வதற்கு ஒன்றுமில்லாமல், மது அருந்தப்போகிற இளைஞர் கூட்டத்திற்கு புத்துணர்வு வரும். அந்த இளைஞர்களுக்கு அடுத்த நாள் வேலைக்குப்போக வேண்டும் என்கிற அக்கறை இல்லை. ஒழுக்கமாக வாழுங்கள் என்று சொன்னால் அதைக் கவனிப்பதேயில்லை...

(தொடரும்)

ஆன்மீகம் 07

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# கிழக்கிலங்கையில் தொலையும் தொன்மைகளும் தொன்மைக் கிராமங்களும் 06

இதுதவிர பட்டிப்பளை கல்லோயாவாகவும் இக்கினியாகல சேனநாயக்க சமுத்திரமாகவும் அம்பாறை திகாமடுல்ல ஆகவும் மாற்றம் பெற்றுள்ளதை முன்னரே பார்த்தோம். கதிர்காமஷத்தினியாருடைய முக்கிய அரசமையமாகிய மாகமம் என்பது இன்று மாகம் எனவாகி திசமகரகமவாகிவிட்டது. பெரிய பள்ளக்காடு, சிறியபள்ளக்காடு, கரடிக்குளம், வெள்ளிப்பாதினி மலை, பொன்னன்வெளி இவை அனைத்தையும் உள்ளடக்கியது பள்ளக்காடு. இது சுனாமிக்குப்பின் (2004) அஸ்ரப் நகராகியது.

விகாரைக்கல் என்பது வெரகல் எனவும், ராசாக்கல் என்பது ரஜகல எனவும், மொட்டைக்கல் என்பது மொட்டையாகல எனவும் சங்கமன் கண்டி என்பது சங்கமனகந்த எனவும் மான் பாஞ்சகல் என்பது றோணகல எனவம் தம்பலகாமம் என்பது தம்பலகமுவ எனவும் வைரீயூற்று என்பது சுமேதங்கபுர எனவும் கல்லாறு என்பது சோமபுர எனவும் நிலாப்பனை என்பது நிலபேவ எனவும் ஆண்டான் குளம் என்பது ஆனந்தகம எனவும் மாற்றம் பெற்றுள்ளன.

### திருகோண மலையில் மாற்றம் பெற்று வரும் ஊர்கள்

அம்பாறை போன்றே திருகோண மலையிலும் பெரும்பாலான ஊர்ப் பெயர்கள் மாறிவிட்டதோடு தமிழ் இனமும் அருகிக் கொண்டு வருவதை கண்கூடாக்க காண முடிகின்றது.

பனிக்கட்டி முறிப்பு என்பது பனிக் கட்டியாவ எனவும் கந்தளாய் என்பது கந்தளாவ எனவும் குமரேசன் கடவை என்பது கோமரன் கடவ எனவும் வெல்வேரி என்பது வில்கம எனவும் வெண்டரசன் குளம் என்பது வெண்டரசபுர எனவும் வானூர் என்பது வான்வெல எனவும் புடவைக் கட்டு என்பது சாகரசபுர எனவும் மாற்றப்பட்டு வருவது போன்று, புதிதாக பல. குடியேற்றங்களை ஏற்படுத்தி பல புதிய சிங்களக்கிராமங்கள் உருவாக்கம் பெற்றும் உள்ளன. சிறிமாபுர, லிங்கபுர, விஜிதபுர, சேருவில பதவிசிறிபுர, அவேபுர எனப்பல கிராமங்கள் புதிதாக உருவாக்கப் பட்டுக்கொண்டே வரப்படுகின்றமையையும் காணமுடியும். தென்னவன்-மரவு-அடி என்பது தென்னமரவடி எனவும் குளக்கோட்டன் கட்டியது என தமிழ் மக்கள் வரலாறு கூறும் கந்தளாய்க் குளமே இன்று அக்ரபோதி கட்டியதாக நிலை நாட்டப்பட்டுள்ளது.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

### மட்டக்களப்பில்பெயர்மாற்றப்பட்டு வரும் தமிழ்க்கிராமங்கள்

இன்று கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடம் மட்டக்களப்பாகும். எனவே ஒரு சில எல்லைக்கிராமங்கள் தவிர்ந்த பகுதி பழமை மாறாமல் உள்ளன.

கோறளைப்பற்று வடக்கு எனப் படும் வாகரைப்பிரதேசத்தில் வாகனேரியில் இருந்து ஐந்து மைல் தெற்கே கல்லெடுத்தவான் என்ற இடம் உள்ளது. இங்கு சில பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கல்லெடுத்தவான் என்பது இன்று கல்வந்தவென என மாறிவிட்டது. இதேபோல வாகரையில் இருந்து தென்மேற்கே மூன்ரை மைல் தூரத்தில் கொங்கல் என்னும் இடத்தில் இன்றும் பிராமிக் கல்வெட்டுக்கள் உள்ளன. இது கொங்கல ஆகிவிட்டது. கல்கூட்டுப்பொத்தானை என்பது கல்டுப் பொத்தான என மாறிவிட்டது. கதிர் ஒளி என்பது கதிரவெளி என மருவியுள்ளது. வரகுணன் ஏரி என்பது வாகனேரி எனவும் கலிங்க எல்லை என்பது கலிங்கவெல எனவும் வடமுனை என்பது வீர நகர் எனவும் மாதுறைப்பளிங்கு, மாதுறைப் பிரதேசம், மாதுறுஓயா எனவும் மாறி விட்டன. வேத்துச் சேனை என்பது விகாரைத்திடல் எனவும் பால்குளம் என்பது கிரிபொக்குன எனவும் குடும்பிமலை என்பது தொப்பக்கல, குடாத்திம்புலாகல எனவும் வழங்கப் படுகிறது. இதுதவிர மல்வத்தை, வனத்தாப்பிட்டி, புதுநகரம், கணபதி புரம், 13,14,11,16 ஆம் எல்லைத் தமிழ்க் கிராமங்களாக அம்பாறை-மட்டக்களப்பு எல்லையில் உள்ளன. இவையெல்லாம் ஒரு காலகட்டத்தில் பெரும் பான்மையினுள் முற்றாகவே மூழ்கிப்போகும் நிலையில் உள்ளன. கெவுளியாமடு என்பது தமிழ் மக்கள் குடியிருந்த இடம். இங்குள்ள தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசம் முழவதுமே சிங்கள மக்களால் நிரப்பப்பட்டு மங்களகம என்னும் சிங்கள ஊர் உருவாக்கப்பட்டுள்ளது. அதுபோன்று குளங்களின் பெயர்களில் கித்துள்வெவ, றூகம்வெவ என மாறிக்கொண்டு சிங்கள உச்சரிப்பாகிவிட்டன.


### முடிவுரை

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெறும் வரை தனித்தமிழ் இனம் தமிழ்ப்பிரதேசம் என இருந்தவையெல்லாம் பல்வேறுவகையில் மாற்றப்பட்டுக் கொண்டுவருவதும், தமிழ் இனம் திட்டமிட்டு குறைக்கப் பட்டு வருவதுமாகிய காரணங்களால் பயங்கரவாதம், போராட்டம். அதன் காரணமாக தமிழ் மக்கள் வெளிநாடுகளிற்கு இடம்பெயர்தல் போன்றனவும் நிகழ நேர்ந்துள்ளது. கிழக்கிலங்கையில் மட்டுமல்ல வேறுமாவட்டங்களில் ஒரு சில முக்கியமான இடங்களை நோக்கினால் வடக்கிலே முல்லைத்தீவிலே பர்வதிகிராமம் என்பது பதவியா எனவும் வவுனுயாவில் பறையன் குளம் என்பது சகுமல்புர எனவும் முல்லைத்தீவில் தண்ணிமுறிப்பு என்பது ஜானகி புரம எனவும் வடக்கே கடம்பன் நதி என்பது மல்வத்து ஓயா எனவும் இன்னும் பிறவும் பெயர் மாற்றங்கண்டுள்ளன.

(முற்றும்)

செல்வி கதிர்காமன் தங்கேஸ்வரி

# நீரிழிவு நோய் உடலை பாதிக்கும் விதம்




Normal heart (cross section)    Dilated heart

நாம் உண்ணும் உணவில் மாச்சத்து, புரதச்சத்து மற்றும் கொழுப்புச் சத்து ஆகியவை உள்ளன என்பதைப் பார்த்தோம்.


மாப்பொருள் என்பது கார்பன், ஐதரசன் மற்றும் ஒட்சிசன் ஆகியவை அடங்கியது. இதனால்தான் இதை காபோவைதரேற் என ஆங்கிலத்தில் கூறுகிறார்--கள்.

கார்போஹைட்ரேட்டானது மோனோ சக்ரைட்டுகள், டை சக்ரைடுகள் மற்றும் பாலி சக்ரைட்டுகள் என மூன்று சர்க்கரைட்பொருள் வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.


இவை மூன்றும்தான் ஜீரண நீர், கல்லீரல் மற்றும் கணையம், பித்த நீர் ஆகிய திரவங்களோடு சேர்ந்து கிளைக் கோஜென் என்ற பொருளாக மாற்றப்பட்டு சேமிக்கப்படுகிறது.

இரத்தத்திலுள்ள குளுக்கோஸை சக்தியாக மாற்றுவதற்கு இன்சுலின் என்ற ஓமோன் கணையத்திலிருந்து சுரக்கிறது. இது சரியாக சுரக்காததாலோ அல்லது குறைவாகச் சுரப்பதாலோ அல்லது இன்சுலின் சரியாக செயற்படாததாலோ இரத்தத்தில் சீனி சக்தியாக மாற்றப்படாமல் அதன் அளவு அதிகரித்து விடும். இவ்வாறு சீனியின் அளவு அதிகரிப்பதைத்தான் நாம் நீரிழிவு நோய் என்று சொல்கிறோம்.

ஆரம்பத்தில் குளுக்கோஸ் அளவு இரத்தத்தில்




**04**



அதிகரிப்பதால் இரத்தக் குழாய்கள் சேதமடைகின்றன. சரியான இரத்த ஓட்டம் உடலுறுப்புகளுக்குக் கிடைக்காததால் ஒவ்வொரு திசுவும் பின்னர் உறுப்பும் பாதிப்புக்குள்ளாகிறது.

**பேராசிரியர்**
**டாக்டர் டி.காமராஜ்,**
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
**சென்னை.**

### நீரிழிவு நோயின்போது இரத்தக் குழாய் சுருங்குதல்


பொதுவாக நீரிழிவு நோய் ஆரம்பிக்கும் போதே இன்சுலின் சுரப்பு இருந்தாலும் கூட அது முழுமையாக வேலை செய்யாது.

இதனால் கல்லீரலில் கொழுப்புச் சத்துப் பிரிக்கப்படும் செயற்பாட்டில் சிறிது சிறிதாகப் பிரச்சினைகள் தோன்ற ஆரம்பித்து தீய கொழுப்புகள் இரத்தத்தில் படிய ஆரம்பிக்கும்.

(தொடரும்)

Health Care **மருத்துவ உலகம்**
உங்கள் நலம் உங்கள் கைகளில்

# உடல் பருமனைக் குறைக்க...




சிம்ரனைப் போல ஸ்லிம்மான உடம்பு வேண்டும் என்று ஆசைப்படாத பெண்கள் இருக்க முடியாது. அதிக உடல் பருமனை தூக்கிக் கொண்டு நடக்க முடியாமல் அவதிப்படுவதைத் தவிர்க்கவும் மற்றவர்களின் கேலி கிண்டலிலிருந்து தப்பிக்கவும் நினைப்பவர்கள் ஒல்லியானவர்களைப் பார்த்து பொறாமைப்படுவது உண்டு. ஒல்லியான உடம்பைப் பெற அதிநவீன சிகிச்சைகள் வந்து விட்டன.


இன்றைய இந்தியர்களை ஆட்கொள்ளும் தேசிய நோயாக (Obesity) உடல் பருமன் நோய் ஆகிவிட்டது. உடல் பருமன் நமது ஆயுளை பாதிக்கும். ஆங்கிலப் பழமொழியான Greater the waist line; shorter the life line இதனை உணர்த்தும். உடம்பு பெருத்துப்போனால் நிறைய நோயை நீங்கள் இலவசமாக வாங்குவீர்கள். முதலில் மூச்சு வாங்கும், இருதநோய், நீரிழிவு நோய், இரத்தக் கொதிப்பு, இடுப்பு வலி, மூட்டு வலி என வகை வகையான நோயை உடல் பருமன் உங்களிடம் கொண்டு வந்து விடும். சில பெண்கள் [illegible]ததரிக்காமல் இருப்பதற்கு உடல் பருமன் கா[illegible] என்கி[illegible]ர்க[illegible]ருத்துவர்கள். அதிக நறையுட[illegible]வர்க[illegible]ற வர்களால் கேலிபேசப்படும்போது மனச்சோர்வு, தாழ்வு மனப்பான்மை போன்ற பாதிப்புகளுக்கும் ஆளாவதாக மருத்துவர்கள் சொல்கின்றனர்.

உடல் பருமனை எந்தச் சிரமமுமின்றி குறைத்து ஒல்லிக் குச்சி உடம்புக் காரியாக மாற்ற முடியும் என்கிறார் சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் அறுவை சிகிச்சை துறைப் பேராசிரியராகப் பணிபுரியும் டாக்டர் எஸ். அசோக் கேஸ்ரோ என் டோ.சர்ஜன்ஸ் சங்க அகில இந்தியத் துணைத் தலைவராகவும் உள்ளார்.

உடல் பருமனைக் குறைக்க அளிக்கப்படும் அதி நவீன சிகிச்சையை எல்ஓஎஸ் (Laparoscopic Obesity Surgery) என்று சொல்வோம்.

இந்தச்சிகிச்சைமூலம் நமது உணவில் இருந்து உடம்புக்குச் செல்லும் சத்து கட்டுப்படுத்தப்படுகிறது. இதற்கு இரைப்பையின்கீழ்கிளிப்போலஒன்று பொருத்தப்படும். இதனால் சாப்பாட்டை வெளுத்து வாங்கும் நபர்கூட கொஞ்சம் சாப்பிட்டதும் போதும் என்று எழுந்து விடுவார்கள்.

இப்படிச் செய்தால் உடம்புக்கு தேவையான சக்தி கிடைக்காமல் போய் உடல்தளர்ச்சி ஏற்படுமோ என்ற பயம் ஏற்படலாம்.




எந்தப் பக்கவிளைவும் ஏற்படாது என்பதை எனது அனுபவத்தின் மூலம் உறுதி சொல்ல முடியும்.

உடல் பருமன் நோயாளியின் உடலுக்கு எந்த அளவுக்கு கலோரி சத்து தேவைப்படுமோ அது நவீன மருத்துவ முறைகளால் சமன் செய்யப்பட்டுவிடும். உடல் மிகவும் மெலிந்து விட்டதே? கொஞ்சம் சதை வைத்தால் நன்றாக இருக்குமே என்ற எண்ணம் சிகிச்சைக்குப் பின்னர் வந்தால் கிளிப்பில் அட்ஜஸ்ட் செய்யும் வசதி இருக்கிறது.

இந்த நவீன சிகிச்சைமூலம் சிக்கென கவர்ச்சியான உடல்கட்டைப் பெறுவதோடு விரும்பும் அளவுக்கு எடையை கூட்டவோ குறைக்கவோ முடியும். இந்தச் சிகிச்சையின் சிறப்பே எந்த உறுப்பையும் குடலையும் வெட்டுவதில்லை என்பதும்தான். சிறுதுவாரங்கள்மூலமே அறுவை சிகிச்சை செய்கிறோம். இதனால் தழும்புகள் இருக்காது.

தேவையான அளவு எடை குறைந்ததும் கிளிப்பை நீக்கி விடலாம். வாரத்துக்கு ஒரு பவுண்டு முதல் இரண்டு பவுண்டு வரை எடை சீராகக் குறைத்துக் கொள்ளலாம்.

இந்தச் சிகிச்சைக்குப் பின்னர் நீரிழிவு நோய் சீராகிறது. இரத்த அழுத்தம் குறைகிறது. இதயநோய் சீராகிறது. குறட்டை பிரச்

**01**



சினை, கேஸ்ட்ரிக் தொல்லை, முழங்கால் வலி, குதிக் கால் வலி, இடுப்பு வலி போன்ற நோய்கள் நாளடைவில் குணமாகின்றன.

அறுவைச்சிகிச்சை என்றாலே பலரும் பதறுகிறார்கள். இதற்குக் காரணம் சிகிச்சைக்குப்பின்னர் நீண்ட ஓய்வு எடுக்க வேண்டியது வரும். அறுவைச் சிகிச்சை செய்வதால் வலி ஏற்படுகிறது. தழும்பு மறைவதில்லை. அவசர உலகில் இதை யாரும் விரும்புவதில்லை. லேசர் மற்றும் லேப்ராஸ் கோபிக் முறையில் துவரம் பருப்பு அளவில் துளை போட்டு சிகிச்சை பெறும் வழிமுறைகளைக் கையாண்டு வருகிறோம்.


வயிற்றுக்குள் கரியமில வாயு செலுத்தப்பட்டு வயிற்று அறையைப் பெரிதாக்குவோம். சிறு துவாரத்தின் மூலம் தொலைக்

**குடல் சிகிச்சை நிபுணர்**
**டாக்டர் எஸ்.அசோக்,**MS.,FRCS.,
**சென்னை-17**

காட்டி செலுத்தப்பட்டு அதன் வழியாக வயிற்று அறையை ஒளியூட்டுவோம்.

பின்னர் லேப்ராஸ்கோப் கருவியை உட்செலுத்தி நோயின் தன்மை ஆராயப்படும்.பின்னர்நுட்பமாக அறுவைசிகிச்சை செய்யப்படும்.இந்த முறையில் பித்தப்பைக் கற்களையும் அகற்ற முடியும். சிறுகுடல், பெருங்குடல் கட்டிகள் இருந்தால் அகற்றலாம். கர்ப்பப்பைக் கோளாறுகள் சூல்பை கட்டிகள், குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை என எளிதாக பிற்காலத்தில் ஹேர்னியா ஏற்படாதவாறு பாதுகாப்பைச் செய்யலாம். சிறுநீரகம் கெட்டுப் போயிருந்தாலோ அட்ரினல் சுரப்பியில் கட்டிகள் இருந்தாலோ வேப்ராஸ் கோபி அறுவை சிகிச்சை மிகச் சிறந்தது.

(முற்றும்)



உலக அஞ்சல் தினம் நேற்று முன்தினம் யாழ். பிராந்தியத்தின் பிரதான தபால் நிலையத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் சூ. ஜெபரட்ணம் உரையாற்றுவதையும் ஏனைய பிரமுகர்கள் அருகில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-அலுவலக செய்தியாளர்)*

# போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து சாட்சியமளிப்பதற்கு தயார்

## பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு



(கொழும்பு)

போலி போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எந்தவொரு நீதிமன்றிலும் சாட்சியமளிக்கத் தயார் என பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போலி போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உலகின் எந்தவொரு நீதிமன்றிலும் சாட்சியமளிக்க அஞ்சப் போவதில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் ஆகியோருக்கு எதிராக விடுதலைப்புலிகளின் கிழக்குத் தளபதி ரமேசின் மனைவி வத்சலாதேவி சுமத்தியுள்ள போலிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான உண்மையான-தரவுகளை சர்வதேச நீதிமன்றங்களில் வெளிப்படுத்த தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வத்சலாதேவி தென்னாபிரிக்காவில் இல்லை எனவும் அவர் லண்டனில் இருக்கின்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த சகல வழக்குகளின் பின்னணியிலும் உருத்ரகுமாரன் செயற்பட்டு வருகின்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சொந்தமான பாரியளவிலான நிதி சுவிட்சர்லாந்து வங்கிகளில் காணப்படுவதாகவும் இவற்றை ஆதார பூர்வமாக நிரூபிக்க முடியும் எனவும் முரளிதரன் சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (4-2)

# அரசுக்கு சொந்தமான துப்பாக்கியால் இரு ஆலோசகர்கள் மீது துப்பாக்கிச் சூடு

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

முல்லேரியாவில் இடம்பெற்ற சம்பவமானது மிகவும் பாரதூரமான விடயமாகும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.


அரசாங்கத்திற்கு சொந்தமான துப்பாக்கிகளால் அரசாங்கத்தரப்பின் இரண்டு ஆலோசகர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதோடு பொதுமக்களும் உயிரிழந்துள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

இதுதொடர்பில் அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைப்பதாகவும் இவ்வாறு நடு வீதியில் துப்பாக்கிச் சூடு நடத்திக் கொண்டால் பொது மக்களுக்கு என்ன பாதுகாப்பு உள்ளது? எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் இதன் போது கேள்வி எழுப்பினார்.

இந்த சம்பவமானது பாரதூரமானது என்பதோடு சம்பவம் பற்றி சுயாதீனமான விசாரணைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற முக்கிய கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி முன்வைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விசாரணையானது நியாயமானதாக இருக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை ஒன்றை முன்வைத்தார். (4-2)

# ஐ.ம.முன்னணியுடன் கூட்டணி வைப்பது குறித்து ஆலோசனை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கொழும்பு மாநகரசபையில் பெரும்பான்மை ஆட்சியை அமைப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. பெரும்பான்மை பலத்தை நிறுவி ஆட்சி அமைப்பதற்கு போதியளவு ஆசனங்கள் காணப்படாத காரணத்தினால் ஜனநாய மக்கள் முன்னணியுடன் கூட்டணி வைப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணி நடைபெற்று முடிந்த தேர்தலில் ஆறு ஆசனங்களைக் கைப்பற்றியதுடன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 16 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதற்கு ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு இணக்கம் வெளியிட்டுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு மாநகரசபையின் மொத்த ஆசனங்களின் எண்ணிக்கை 53 என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேயர் வேட்பாளர் ஏ.ஜே.எம். முஸம்மில் 55 ஆயிரத்து 448 விருப்பு வாக்குகளையும் ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட்ட மிலிந்த மொரகொட 32 ஆயிரத்து 103 விருப்பு வாக்குகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர். (4-2)

# ராஜ் ராஜரட்ணத்திற்கு இம்மாதம் 13 இல் தண்டனை

(கொழும்பு)

பங்குச் சந்தை உள்மோசடியுடன் தொடர்பு கொண்டவர் என்ற குற்றஞ் சாட்டப்பட்டுள்ள இலங்கையை பிறப்பிடமாக கொண்ட அமெரிக்க கோடீஸ்வர வர்த்தகரான ராஜ் ராஜரட்ணத்திற்கான தண்டனை எதிர்வரும் 13 ஆம் திகதி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு எதிரான 14 குற்றச்சாட்டுக்கள் குறித்த இறுதி தீர்ப்பே அன்றைய தினம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு 24 வருடம் வரையிலான சிறைத் தண்டனை வழங்க முடியும் என நீதித்துறையினர் தெரிவித்துள்ளனர். (4-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.10 11

★ *1634*-டென்மார்க் மற்றும் ஜேர்மனியில் இடம்பெற்ற பெரும் வெள்ளத்தினால் 15 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★ *1801*- காளையார் கோயிலைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் அதனையும் சுற்றியுள்ள காடுகளையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

★ *1811*-ஜோன் ஸ்டீவன்ஸ் கண்டுபிடித்த ஜூலியானா என்ற முதலாவது நீராவிப் படகுக் கப்பலின் சேவை நியூயோர்க்கிற்கும் நியூஜேர்சிக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது.

★ *1852*-அவுஸ்திரேலியாவின் மிகப் பழைமையான சிட்னி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

★ *1865*-ஜமெய்க்காவில் நூற்றுக்கும் அதிகமான கறுப்பின மக்கள் அரசுக்கெதிரான எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

★ *1899*-இரண்டாவது போவர் போர் தென்னாபிரிக்காவின் ஐக்கிய இராச்சியத்துக்கு எதிராக ஆரம்பமானது.

★ *1941*-மக்கெடோனியாவில் தேசிய விடுதலைப் போர் ஆரம்பமானது.

★ *1944*-துவீனிய மக்கள் குடியரசு சோவியத் ஒன்றியத்துடன் இணைந்தது.

★ *1958*-நாசாவின் முதலாவது விண்கலம் பயனியர் 1 சந்திரனை நோக்கி ஏவப்பட்டது. இது சந்திரனை அடையாமலே மீண்டும் இரண்டு நாட்களில் பூமியில் வீழ்ந்து எரிந்தது.

★ *1968*- நாசா முதற் தடவையாக மூன்று விண்வெளி வீரர்களை அப்பல்லோ 7 விண்கலத்தில் விண்ணுக்கு ஏவியது.

★ *1984*-சலேஞ்சர் விண்ணோடத்தில் சென்ற கத்ரின் சலிவன் விண்ணில் நடந்த முதலாவது அமெரிக்கப் பெண் என்ற பெருமையைப் பெற்றார்.

**பிறப்புக்கள்**

★ *1738*-ஆர்தர் பிலிப், நியூ சவுத் வேல்ஸ் முதலாவது ஆளுநர் (இ.1814)

★ *1820*-ஆண்ல்ட் சதாசிவம்பிள்ளை, ஈழத்தின் தமிழறிஞர், தமிழாசிரியர், இதழாசிரியர், புலவர் (இ.1896)

★ *1826*-மாயூரன் வேதநாயகம்பிள்ளை, தமிழ்ப் புதின முன்னோடி (இ.1889)

★ *1942*-அமிதாப் பச்சன், இந்தி நடிகர்


★ *1962*-ஆன் என்ரைட், அயர்லாந்து பெண் எழுத்தாளர்

**இறப்புக்கள்**

★ *1889*-ஜேம்ஸ் பிரிஸ்காட் ஜூல், ஆங்கிலேய இயற்பியலாளர் (பி.1818)

★ *2006*-ஏ.ஜே.கனகரத்னா, ஈழத்தின் பிரபல பத்திரிகையாளர், எழுத்தாளர். (பி.1934)

# நவீன எண் சோதிடம்




## பல்வேறு சோதனைகளை எதிர்த்து எதிர் நீச்சல் போட்டு ஏற்றம் பெற்றவராயிருப்பர் 68

## உடல் எண் 8 உயிர் எண் 3

8,17,26 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 3 வருமேயானால் இவர்கள் குரு, சனி ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவர்களாகவும் சிலர் குள்ளமாகவும் முன்பற்கள் இரண்டும் சற்று பெரிதாகவும் கலை உணர்வு கொண்ட முகத் தோற்றமும் கொண்டு காட்சியளிப்பர். ஆரம்ப வாழ்க்கையில் பல்வேறு பிரச்சனைகளில் அடிபட்டு வாழ்ந்ததால் இவர்களைப் பெரும் அனுபவசாலி என்று அழைக்கலாம். நேர்மை, நீதி, போன்றவற்றில் நம்பிக்கை உள்ளவர்கள். இளமையிலேயே பல்வேறு சோதனைகளை அனுபவித்து எதிர்நீச்சல் போட்டு ஏற்றம் பெற்றவர்கள் என்றால் மிகையாகாது.

இப்படிப்பட்ட இவர்களுக்கு குடும்ப வாழ்க்கை ஒரு குழப்பம் மிகுந்த வாழ்க்கையாக இருக்கின்றதே என்று கவலைப்படுவர். தன்னைச் சார்ந்த சமூகத்திற்கும் தனது நாட்டிற்கும் நல்லது செய்ய வேண்டும் என்று எண்ணுவர். நல்ல எண்ணம் கொண்ட இவர்கள் கடுமையாகப் பேசுவார்களே தவிர, கெட்டவர்கள் அல்ல. ஒளிவு மறைவு இன்றி, தன் மனதில் பட்ட கருத்துக்ளைக் கூறிவிடுவர். இதனால், பலரது பகையும் உருவாகலாம்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

ஆண்டவனது அனுக்கிரகம் பெற்ற இவர்களுக்கு எந்த வழியிலும் செல்வம் சேரும். ஆனால் மன அமைதி குறைந்து விடும். ஒரு பிரச்சனையில் இறங்கிவிட்டால் அது முடியும் வரை கடுமையாக உழைப்பர். வெற்றி தோல்விகயைப்பற்றிக் கவலைப்படாது, சளைக்காது, போராடுவர். சவால்விட்டு சில காரியங்களைச் சாதிக்க முயல்வர். இதனால், எதிரிகள் கூட இவர்களை மதிப்பர்.

தனக்குட் பொறுக்க முடியாத அளவுக்குப் பிரச்சனைகள் உருவாகுமேயானால் ஆண்டவனிடத்தில் அழ ஆரம்பித்துவிடுவர். இளமையில் பட்ட கஷ்டங்களையும், அனுபவங்களையும் அடிக்கடி கூறிக்கொண்டிருப்பர். தாம் இந்த உலகத்தில் கஷ்டப்படவே பிறந்துள்ளோம் என்று எண்ணுவர். பெண்களால் ஆண்களுக்கும் ஆண்களால் பெண்களுக்கும் இடையூறு உருவாகின்றது. இதனால், குடும்ப வாழ்க்கை என்பது மனிதனைக் குழப்பிவிடும் தொல்லைகளில் ஒன்று என்று எண்ணுவர்.

இவர்கள் மனம் கலை, கலாசாரம் பண்பாடு, சமயம், சட்டம், மருத்துவம், சோதிடம், பொறியியல், போன்றவற்றை ஆராயும். பெயர் நன்றாக அமைந்தவர்களுக்கு இளமையில் கஷ்டப்பட்டாலும் படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைந்து நல்ல வாழ்க்கைத் துணைவர், நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் பெற்று வாழ்கின்றனர். ஆனால், பெயர் நன்றாக அமையப் பெறாதவர்கள் குடும்ப வாழ்க்கையை நரக வாழ்க்கையாக எண்ணுகின்றனர்.

இன்னும் சிலருக்கு ஆரோக்கியம் கெட்டோ, பொருளாதார வசதி நலிந்தோ, பிள்ளைகளால் பிரச்சனையோ உருவாகிவிடுகின்றது. இவர்கள் மனம் அழகான ஓவியங்களையும் பச்சைநிறம் கொண்ட விவசாயப் பண்ணைகளையும், மலைப்பாங்கான இடங்களையும் தெய்வீகமான கலைக் கூடங்களையும், மிகப்பழமையான கோயில்களையும் கண்டு அமைதி கொள்ளும்.

நாணயத்தின் நாயகர்களாகிய இவர்கள் எவ்வழியிலும் தான் வாங்கியதைக் குறிப்பட்ட நேரத்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

தில் கொடுக்க முயல்வர். நிர்வாகத் திறமையும், தெய்வ நம்பிக்கையும் கொண்ட இவர்களுக்கு முன் கோபமும் மூர்க்கத்தனமும் முன்னேற்றத்திற்கு ஒரு தடைக்கல்லாகும். எல்லா உலக விடயங்களும் தெரிந்திருக்கும் இவர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பாகக் காட்சியளிப்பர்.

பொதுவாக தொழிற் கல்வியால் உயர்வும், இன்னும் சிலர் கற்பனை சக்தியால் எழுத்தின் மூலம் உயர்வும், பேச்சின் மூலம் முன்னேற்றமும் பெறுகின்றனர். ஆனால், பெயர் நன்றாக அமையாவிட்டால், சிக்கனச் செலவு செய்யும் இவர்களுக்கு விரையச் செலவுகள் காத்துக் கொண்டிருக்கும். கோர்ட் வழக்குகள் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கும். மன நிலை கெட்டு விடும். தான் ஒரு சீர்திருத்த வாதியாக வாழவேண்டும் என்று எண்ணும் இவர்களுக்கு பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் சிறப்புடன் வாழலாம்.

**தொழில்**

இரும்பு சம்பந்தமான அனைத்துத் தொழிலும் சிறந்தவையே. வாகனம், காண்ட்ராக்ட், கமிஷன் ஏனென்சீஸ், கைநுணுக்கத் தொழில், கலை சம்பந்தமான தொழில், பல பொருள் வியாபாரம் ஒரிடத்திலிருந்து பொருட்களை மற்றுமொரு இடத்திற்கு அனுப்புதல், அச்சுத் தொழில், பப்ளிக்கேசன் போன்றவைகள் சிறப்பாகும்.

**நோய்**

ஆஸ்த்துமா நோய், வயிற்றுக் கோளாறு, மூட்டுவலி, முதுகு வலி, பல்வலி, தோல்வியாதி, நரம்புக் கோளாறு போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்களுக்கு புதன், குரு சூரியன் ஆதிக்கத்தில் பெயரை அமைத்துக் கொள்ளலாம். ஆனால் புதன் ஆதிக்கத்தில் பெயரை அமைத்துக்கொள்வது சாலச் சிறந்தது என்பதால் 14,23,32,41,50,59,77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-5,3,1

யோகமான தேதிகள்-5,14,23, 3,12,21,30;1,10,19,28

யோகமான மோதிரக்கல்-நீலக்கல்,எமிதிஸ்ட்

யோகமான நிறம்- நீலம், மஞ்சள், கத்தரிப்பூ நிறம்

ஆகாத தேதிகள்-8,17,26; 6,15,24

ஆகாத நிறம்- கறுப்பு,சிவப்பு, பச்சை


## பெயர் எண்களின் பலன்


**109 எண் பலன்**

இந்த எண் பெயராகவோ, வியாபார விலாசமாகவோ வந்தால் தைரியமாக எதையும் செய்து சாதிப்பர். அரசாங்கத் தொடர்பால் முன்னேற்றம் ஏற்படும். எதிர்பாராத யோகத்தைக் கொடுக்கும். ஆனால், இந்த எண்ணின் சத்ரு பேராசைதான். இதனால் ஓரளவு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்ந்தால் நல்ல முன்னேற்றம் அடையலாம்.

**110 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகவோ, வியாபார விலாசமாகவோ அமைத்துக்கொண்டால் இவர்கள் செய்யும் தொழிலாலும், குடும்பத்தாலும் மனக்குழப்பம் உண்டாகும். இவர்கள் எதைச் செய்தாலும் குழம்பிக்கொண்டே





செய்வர். திடீரென்று ஒருநாள் பிரகாசிக்கும் இவர்கள் சில நாட்கள் சென்றதும் இருண்ட காலத்தில் இருப்பது போன்று தோன்றுவர். ஆனால், 7,16,25 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு ஓரளவு அதிர்ஷ்டத்தைத் தரும்.

**111 எண் பலன்**

இந்த எண் பெயராகவோ, வியாபார விலாசமாகவோ வந்தால், நல்ல பெயரும் நல்ல செல்வமும் பெருகும். நெருப்பு, மின்சாரத்தொடர்பு கொண்ட தொழிலாலும் இரும்பு, நெருப்பு சம்பந்தமான தொழிலாலும் நன்மை கிடைக்கும். ஆனால், 6,15,24 போன்ற தேதிகளில் பிறந்தவர்களுக்கு இந்த எண் நல்ல பலனை அளிக்காது.

**112 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டால், புகழும் அந்தஸ்தும் உயரும். தான் பிறருக்காகச் செய்கின்ற காரியங்களில் வெற்றியடைகின்றனர். தனக்கென்று செய்கின்ற காரரியங்களில் தாமதம் ஏற்படும். ஆனால், 1,10,19,28; 6,15,24 போன்ற தேதிகளில் பிறந்தவர்களுக்கு இந்த எண் எல்லாவழிகளிலும் உயர்வைக் கொடுக்கும்.

(தொடரும்)

# அரசு முன்வைத்துள்ள யோசனைகளை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்



## அமைச்சர் திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது பல்லின மக்களும் கொண்டுள்ள நம்பிக்கை இந்தக் தேர்தலில் புலனாகியுள்ளது என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழ்,முஸ்லிம் பேர்கர் உள்ளிட்ட ஏனைய இனங்களும் ஜனாதிபதி மீது நம்பிக்கை கொண்டுள்ளனர்.

நகர மக்களுக்காக அரசாங்கம் முன்வைத்த யோசனைத் திட்டத்தை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி.யும் சுமத்தி வந்த குற்றச்சாட்டுக்களுக்கு மக்கள் பதிலளித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் கட்சி ஈட்டியுள்ள அமோக வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (4-2)

# யாழ்.பொலிஸ் சேவைகள் விரைவில் சொந்த கட்டடத்தில்

யாழ்.மாவட்டத்தில் தனியார் கட்டடங்களிலும் வீடுகளிலும் செயற்பட்டுவரும் பொலிஸ் நிலையங்களுக்கு விரைவில் சொந்தமான கட்டடங்களை அமைப்பதற்கு பொலிஸ் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

பொலிஸ் நிலையங்களுக்குச் சொந்தமான கட்டடங்களை நிர்மாணிக்கும் பணியில் கட்டடங்களுக்குப் பொருத்தமான அமைவிடங்களில் காணித்துண்டுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இடங்களில் பொலிஸ் நிலையங்களுக்கான கட்டட நிர்மாணத்துக்கு அரச காணிகளைக் கண்டறிந்து பெற்றுக்கொள்ளும் வகையில் பிரதேச செயலர்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர். பிரதேச செயலாளர்களால் அரச காணித்துண்டுகள் ஒதுக்கிக் கொடுக்க முடியாத இடத்தில் உள்ளூர் பெறுமதியில் காணிகளைக் கொள்வனவு செய்வதற்கும் பொலிஸ் திணைக்களம் முன்வந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 20 இற்கும் மேற்பட்ட பொலிஸ் நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவை தனியார் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன.

புதிதாக நிர்மாணிக்கப்படும் பொலிஸ் நிலையங்கள் பொலிஸ் நிலைய கட்டமைப்புக்கும் பொலிஸ் நிலைய வள வசதிகளும் ஏற்புடைய வகையில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக அச்சுவேலி,நெல்லியடி, சுன்னாகம் ஆகிய இடங்களில் பொலிஸ் நிலையத்துக்கான சொந்தக் கட்டடங்கள் புதிதாக கட்டப்படவுள்ளன. (4-2)

# தம்மை விரைவில் மீள்குடியேற்றுமாறு இரணைப்பாலை மக்கள் கோரிக்கை

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டம் இரணைப்பாலையில் மீள் குடியேற்றத்திற்கென அழைப்பு விடுவிக்கப்பட்ட போதும் இதுவரை தம்மை மீள்குடியேற்றம் செய்யவில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேற்படி பகுதியில் கடந்த 7 ஆம் திகதி மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் பாதுகாப்பு அமைச்சிற்கூடான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனவே மீள்குடியேற்றத்திற்கான பதிவுகளும் வவுனியா முகாம்களில் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் மக்கள் தொடர்ந்தும் முகாம்களிலேயே தங்கியுள்ளனர். மேற்படி இரணைப்பாலைக் கிராமத்தைச் சேர்ந்த 127 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு மற்றும் அம்பலவன், பொக்கணை போன்ற கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 760 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் கோம்பாவில் கிராமத்தில் தற்காலிக காணிகள் என்ற பெயரில் நிரந்தரக் காணிகள் வழங்கி மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களில் முதற்கட்டமாக 100 குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி நிறைவடையும் எனவும் இதனைத் தொடர்ந்து மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-2)




திருநெல்வேலி Smart Kids ஆங்கில மொழிமூல பாலர்பாடசாலையின் நவராத்திரி தினவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் சிறுவர்களின் கலை நிகழ்வினைப் படத்தில் காணலாம்

# தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த 20 பேருக்கு இழப்பீடு கிடைக்கவில்லை

## சுதந்திர வர்த்தக வலய ஊழியர் சங்கம் கவலை

(கொழும்பு)

அண்மையில் கட்டுநாயக்கவில் இடம் பெற்ற தாக்குதலில் பலத்த காயங்களுக்கு உள்ளான தமது உறுப்பினர்கள் சுமார் 20 பேருக்கு அரசாங்கத்தினால் இதுவரை இழப்பீடு வழங்கப்படவில்லை என சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொது ஊழியர் சங்கம் தெரிவிக்கிறது.

இந்த ஊழியர்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் அன்ரன் மார்க்ஸ் தெரிவிக்கிறார்.

கடந்த மே மாதம் 30 ஆம் திகதி தாக்குதல் சம்பவத்தில் சுதந்திர வர்த்தக வலயத்தின் 270 க்கும் அதிகமான ஊழியர்கள் காயங்களுக்கு உள்ளானதாக அவர் குறிப்பிடுகிறார்.

இது குறித்து முதலீட்டுச் சபையிடம் வினவியபோது,

காயமடைந்த ஊழியர்களுக்கு தொழிலாளர் சட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அதன் பேச்சாளர் குறிப்பிடுகிறார். (4-2)

# மாங்குளம்-முல்லைத்தீவு வீதி புனரமைக்கப்படுகின்றது

(மல்லாவி)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் முல்லைமாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழுள்ள மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவிற்கு செல்லும் 49.25 கிலோ மீற்றர் தூரங் கொண்ட (A-34) வீதி புனரமைக்கப்படவுள்ளது.

இப் புனரமைப்பு வேலைகளில் பாலங்கள் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் சிலாவத்தை சந்தியிலிருந்து முல்லைத்தீவு நகர் வரையிலான பகுதிகள் காப்பெற் கலவை இடுவதற்கு தயாரான நிலையில் உள்ளது.

மேற்படி இவ்வீதியானது 15 வருடங்களுக்கு மேலாக குன்றும் குழியுமாக மக்கள் பயணம் செய்வதற்கு மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். (4-3-15)

# வெளிநாட்டவர்களின் அழுத்தங்களுக்கு சிறந்த பதிலளிக்கப்பட்டுள்ளது–சுசில்

(கொழும்பு)



வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு சிறந்த பதிலளிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் நடைபெற்று முடிந்த தேர்தலில் புத்திசாதுரியமாக பதிலளித்துள்ளனர்.

சமாதானத்தை நிலைநாட்டி அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டு வரும் அரசாங்கத்தை மக்கள் வரவேற்றுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த பல உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை அரசாங்கம் கைப்பற்றியுள்ளது.

அரசாங்கத்தின் வேகமான அபிவிருத்தித் திட்டங்களுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் எதிர்காலத்திலும் இந்த ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (4-2)

# பல்கலைக்கழக கற்கைநெறிகள் ஒரே காலப்பகுதியில் ஆரம்பம்

(கொழும்பு)

இந்த வருடத்தில் இருந்து சகல பல்கலைக்கழகத்திற்குமான புதிய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஒரே காலப்பகுதியில் ஆரம்பிக்க உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் கடந்த மூன்றாம் திகதியில் இருந்து 27 ஆம் திகதிவரையில் சகல பல்கலைக்கழகங்களுக்குமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார்.

எனினும் களனி பல்கலைக்கழகத்தை தவிர ஏனைய பல்கலைக்கழகங்களில் இது நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

களனி பல்கலைக்கழக நடவடிக்கைகள் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# ரயில் கடவைகளில் புதிய பாதுகாப்பு சமிக்ஞை

## புகையிரத திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் புதிதாக பாதுகாப்பு சமிக்ஞை கட்டமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு புகையிரத திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த புதிய திட்டத்திற்கென அரசாங்கம் ஆயிரம் மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளதாக புகையிரதப் பொதுமுகாமையாளர் பி.ஏ.பி.ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

புதிய சமிக்ஞை கட்டமைப்பிற்காக அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒட்டுமொத்த புகையிரதக் கட்டமைப்பிலும் சுமார் 750 பாதுகாப்பற்ற கடவைகள் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் பதிய பாதுகாப்பு சமிக்ஞை கட்ட மைப்பினை நிறுவுவதற்கான விலைமனு கோரல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டு கிறார். (4-2)

# அண்ணா அறிவாலயம் மக்களின் சொத்தை அபகரித்து கட்டப்பட்டது

## இடைத்தேர்தல் களத்தில் ஜெயலலிதா முழக்கம்

திருச்சி தேர்தல் பிரசாரத்தில் சென்னை அண்ணா அறிவாலயம், திருச்சி தி.மு.க தலைமையகம் என அனைத்தும் அபகரித்து கட்டப்பட்டது என்று ஜெயலலிதா பிரசாரம் செய்துள்ளார்.

முதல்வர் ஜெ.ஜெயலலிதா திருச்சி மேற்கு தொகுதி இடைத்தேர்தலில் அ.தி.மு.க சார்பில் போட்டியிடும் மு.பரஞ்சோதிக்கு ஆதரவாக கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்வேறு இடங்களில் பிரசாரம் செய்தார். அங்கு பேசுகையில், தி.மு.க ஆட்சியின் போது மிரட்டிப் பறிக்கப்பட்ட நிலங்கள் மீட்கப்பட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று சட்டப்பேரவை பொதுத் தேர்தல் பிரசாரத்தின் போது கூறினோம். அதன்படி இதுவரை ரூ624. 66 கோடி மதிப்புள்ள நிலங்கள் மீட்கப்பட்டு நில உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டு விட்டது.

இந்தத் தொகுதியில் தி.மு.க சார்பில் முன்னாள் அமைச்சர் கே.என் நேரு போட்டியிட்டிருக்கிறார். அவரது பெயர்தான் நேரு. ஆனால் அந்தப் பெயருக்கு சற்றும் பொருத்தம் இல்லாதவர் நேர்மாறான வழியில் செயற்படக் கூடியவர்.

முந்தைய தி.மு.க ஆட்சியில் நேரு அமைச்சராக இருந்து கொண்டு மக்களுக்கு எந்த நன்மையையும் செய்யவில்லை. மாறாக மக்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நிலங்களை பினாமிகள் பெயரில் வாங்கிக் குவித்தவர்தான் இந்த நேரு.

இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் பொதுமக்கள் மட்டுமல்லாமல் தி.மு.க அனுதாபிகளே அவர் மீது நில அபகரிப்பு புகார்களை அளித்துள்ளனர். இந்தத் தருணத்தில் சென்னையில் தி.மு.க தலைமையகம் அமைந்துள்ள இடத்தை கருணாநிதி எப்படி அபகரித்தார் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதையடுத்து ஜமீக் தாரின் இளைய மகன் பி.சுப்புரத்தினம் நாயுடு சென்னைக்கு வரவழைக்கப்பட்டார். இந்த இடத்தை தி.மு.கவுக்கு கொடுத்துவிடும்படியும் இல்லாவிடில் எந்தவித இழப்பீடும் இன்றி நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் இந்த இடம் கையகப்படுத்தப்படும் எனவும் மிரட்டப்பட்டார். இதனால் வேறு வழியின்றி அந்த இடம் தி.மு.க அறக்கட்டளையின் பெயரில் 1972 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் இந்த இடத்துக்கு விதி விலக்கும் அளிக்கப்பட்டது. இந்தப் பத்திரத்தில் ஜமீன்தாரின் குடும்பத்தினர் பலர் கையெழுத்து இடவில்லை. ஜமீன் குடும்பத்தில் உள்ள 10 பேருக்கு பதிலாக சுப்புரத்தினம் நாயுடு மட்டும் கையொப்பமிட்டுள்ளார். ஆனால் அந்த இடத்துக்கான பத்திரத்தில் சுப்புரத்தினம் நாயுடு பெயர் இல்லை. எனவே இதை விற்பதற்கான அதிகாரம் அவருக்கு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இது சர்காரியா கமிஷன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக அந்தக் காலத்திலேயே நில அபகரிப்பில் கைதேர்ந்தவர் கருணாநிதி என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



இந்த நடவடிக்கைகள் மூலம் ரூபா 624. 66 கோடி மதிப்புள்ள நிலங்கள் மீட்கப்பட்டு நில உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டு விட்டது. தவறு செய்தவர்கள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர் என்றார் முதல்வர். (4-2)



பா.ஜ மூத்த தலைவர் அத்வானி மேற்கொள்ளவுள்ள ரதயாத்திரை தொடர்பாக டில்லியில் நடந்த விழாவில் அவருக்கு தலைப்பாகை அணிவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## இந்தியா, இங்கிலாந்து கடற்படைகள் பயிற்சி

(புதுடில்லி)

இந்தியா, இங்கிலாந்து கடற்படைகளின் வருடாந்த கூட்டுப் பயிற்சி இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

கொங்கண் என பெயரிடப்பட்டுள்ள இந்த கூட்டுப் பயிற்சியில் அணு விசையில் இயங்கும் நீர்மூழ்கி கப்பல்களும் இடம் பெறுகின்றன. இந்தியாவில் ஐ.என்.எஸ். ஷங்குஷ் மற்றும் இங்கிலாந்தின் டிரபால்கர் வகை நீர்மூழ்கி கப்பல்கள் பயிற்சியில் ஈடுபடுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவிடம் இருந்து நெர்பா கே 152 என்ற அணுவிசை நீர்மூழ்கி கப்பலை பெறவுள்ள நிலையில் அணுவிசை நீர்மூழ்கி கப்பல்களை கையாள்வதற்கான தனித்த பயிற்சி மேற்கொள்ளப்படவுள்ளது இதுவே முதல் முறையாகும்.

இந்தியா- வங்கதேசம் இடையே முதல் முறையாக இராணுவ கூட்டு பயிற்சி நடைபெறவுள்ளது. வங்கதேசத்தில் சில்ஹெட் பகுதியில் நடைபெறவுள்ள இந்த கூட்டு பயிற்சிக்கு ஆபரேசன் சம்ப்ரிதி என்று பெயரிடப்பட்டுள்ளது. (4-2)

# பாரதச் செய்திகள்

## மும்பை குண்டுவெடிப்பு குற்றவாளி பாகிஸ்தானில் பதுங்கியுள்ளார்

### உளவு நிறுவனங்கள் தெரிவிப்பு

கடந்த 1993 ஆம் ஆண்டு மும்பையில் நடந்த தொடர் குண்டு வெடிப்புக்கு மூளையாக செயல்பட்டவன் நிழல் உலக தாதா என அழைக்கப்படும் தாவூத் இப்ராகிம்.

குண்டு வெடிப்பை தொடர்ந்து தாவூத் இப்ராகிமும் அவனது கூட்டாளிகளும் தலைமறைவாகிவிட்டனர். கூட்டாளிகள் மட்டும் சிலர் கைது செய்யப்பட்டனர்.

பாகிஸ்தானில் கராச்சி நகரில் பதுங்கி இருந்த தாவூத் இப்ராகிம் அரபு நாட்டுக்கு தப்பிச் சென்று விட்டதாக முன்பு கூறப்பட்டது. அதன் பின் மீண்டும் பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்திருப்பதாக தகவல்கள் வெளியாகின.

இந்தத் தகவலை பாகிஸ்தான் மறுத்தது. தாவூத் இப்ராகிம் எங்கள் மண்ணில் இல்லவே இல்லை என்று கூறியது. தாவூத் இப்ராகிம் பற்றி வெளியான தகவல்களை உறுதி செய்ய இந்திய உளவு நிறுவனங்கள் களத்தில் இறங்கின.

இதன் அடிப்படையில் உளவு நிறுவனங்களுக்கு தயாரித்துள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது, தாவூத் இப்ராகிம் பாகிஸ்தானில்தான் உள்ளார். கராச்சி நகரில் ஆடம்பர பங்களாவில் வசித்து வருகிறார்.

அவருக்கு பாகிஸ்தான் அரசு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. ராஜயோக வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். ஐ.எஸ்.ஐ அமைப்பில் உள்ள உயர் அதிகாரிகள் சிலரின் குழந்தைகள் வெளிநாடுகளில் படிக்கின்றனர். அவர்களுக்கு தேவையான உதவிகளை தாவூத் இப்ராகிம் தான் செய்து வருகிறார். அந்த வகையில் பயன் அடைந்த அதிகாரிகளும் திருமணத்துக்கு வந்திருந்தனர். பாகிஸ்தான் இராணுவத்தை சேர்ந்த உயர் அதிகாரிகளும் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர். (4-2)

## தாஜ்மஹாலுக்கு எந்த ஆபத்துக்களும் ஏற்படாது



(ஆக்ரா)

சமீபத்தில் இங்கிலாந்து பத்திரிகையில் வெளியான கட்டுரையில் தாஜ்மஹாலில் வெடிப்பு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் இருக்கிறது. இன்னும் 5 ஆண்டுகளில் தாஜ்மஹால் இடிந்துவிடும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பாரதீய ஜனதா கட்சியின் உள்ளூர் எம்.பி ராம்சங்கர் கதேரியா மற்றும் வரலாற்று ஆய்வாளர் ஒருவரை மேற்கோள் காட்டி அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டு இருந்தது.

இது உலக அதிசயங்களின் ஆர்வலர்களுக்கு அதிர்ச்சியை அளித்தது. இங்கிலாந்து பத்திரிகையில் வந்த செய்திக்கு இந்திய தொல்பொருள் ஆய்வு துறை மறுப்பு தெரிவித்துள்ளது. இதுபற்றி இந்த துறை அதிகாரிகள் கூறியதாவது,

தாஜ்மஹாலுக்கு எந்த ஆபத்தும் இல்லை. நாங்கள் நேரில் சென்று ஆய்வு நடத்தினோம் தாஜ்மஹாலில் எங்கும் எந்த விரிசலும் ஏற்படவில்லை. சுவரில் பதிக்கப் பட்டுள்ள மரங்கள் உளுத்துப்போகவில்லை. சேதம் எதுவும் இன்றி பலமாக உள்ளன.

தாஜ்மஹால் யமுனை நதியின் கரையில் அமைந்துள்ளது. தற்போது அந்த நதி வரண்டு வருகிறது. இதனால் அச்சம் அடைந்த சிலர் தாஜ்மகாலுக்கு ஆபத்து என்று வதந்தியை கிளப்பி விட்டுள்ளனர் என அவர்கள் கூறினார்கள்.

இது பற்றி பாரதீய ஜனதா எம்.பி ராம்சங்கர் கதேரியா கூறியதாவது,

யமுனை நதி வரண்டுவிட்டது. இதனால் தாஜ்மஹாலுக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற எனது அச்சத்தையும் கவலையையும் தெரிவித்தேன். தாஜ்மஹால் நல்ல நிலையில் இருக்க வேண்டுமானால் நதியில் தண்ணீர் இருப்பது அவசியம். தாஜ்மஹால் 5 ஆண்டுகளில் இடிந்து விழுந்துவிடும் என்று காலவரையறை எதையும் நான் குறிப்பிடவில்லை. ஆபத்து இருக்கிறது என்று மட்டுமே கூறினேன். இதுபற்றி பலர் என்னிடம் தொலைபேசியில் கேட்டனர். அவர்களுக்கு நான் தெளிவாக விளக்கிவிட்டேன். வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் பலரும் இதே கருத்தை தான் வெளியிட்டுள்ளனர் என அவர் கூறினார். (4-2)

## 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் ஸ்வான் நிறுவனத்திற்கு தொடர்பு

(புதுடில்லி)

ஸ்வான் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உரிமங்களை இரத்துச்செய்ய மத்திய தொலைத்தொடர்புத்துறை முடிவு செய்தது.

இது தொடர்பாக மத்திய அரசு வட்டாரங்கள் கூறியாவது, 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த முறைகேட்டில் ஸ்வான் தொலைத் தொடர்பு நிறுவனம் பயனடைந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந் நிறுவனம் ரிலையன்ஸ் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் துணைநிறுவனம் என்ற குற்றம் சாட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் ஸ்வான் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 13 யு.ஏ.எஸ் உரிமங்களை இரத்துச் செய்யலாமா என்பது குறித்து மத்திய தொலைத்தொடர்புத் துறை விசாரணை நடத்தி வந்தது. சி.பி.ஐ தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் தொலைத்தொடர்பு உரிமம் பெறுவதற்கான தகுதியை ஸ்வான் நிறுவனம் பூர்த்தி செய்யவில்லையெனக் கூறப்பட்டது. இதை தொடர்ந்து ஸ்வான் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உரிமங்களை இரத்து செய்ய தொலைத்தொடர்புதுறை முடிவுசெய்துள்ளது.


2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு முறைகேட்டில் சிக்கியுள்ள சில தொலைத்தொடர்பு நிறுவனங்கள் டி .டி.எச் தொழிலிலும் ஈடுபட்டு வருவதாக விசாரணை அமைப்புக்கள் கண்டுபிடித்துள்ளன. இதை தொடர்ந்து சம்பந்தப்பட்ட டி.டி.எச் நிறுவனங்கள் குறித்தும் விசாரணை நடத்த புலனாய்வு அமைப்புக்கள் முடிவு செய்துள்ளன. இதனால் 2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கின் விசாரணை வரம்பு மேலும் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் ஆவணங்களை சி.பி.ஐ ஆய்வு செய்து வருவதாகவும் எயர்செல்- மேக்சிஞ் விவகாரத்தில் தொலைத்தொடர்புதுறை முன்னாள் அமைச்சர் தயாநிதிக்கு உள்ள தொடர்பு குறித்த விடயங்களும் இதில் அடங்கும் என்றும் சி.பி.ஐ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையே 2ஜி ஒதுக்கீட்டில் நடந்த சர்ச்சையை அடுத்து புதிய தொலைத்தொடர்பு கொள்கையை அறிவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. (4-2)

# சர்வதேசத்தின் பார்வைக்கு இனப்பிரச்சினை சென்றுள்ளதால் எம்மை ஏமாற்றமுடியாது-அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)



அவுஸ்திரேலியாவில் வாழும் யாழ்ப்பாண மக்கள் கிழக்கு மாகாண மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு வழங்கும் உதவியானது வடக்கு-கிழக்கு தமிழர் தாயக பூமி என்பதற்கான உறவுப் பாலத்தின் உறுதிப்பாடாகும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,


பிரதேச வாதத்தினைப் பேசி தமிழினத்தை கூறு போட எத்தனிப்பவர்களின் வாய்களுக்கு பூட்டுப் போட வேண்டியுள்ளது. பல்வேறுபட்ட இழப்புக்களைச் சந்தித்து இது வரை காலமும் கௌரவமான அரசியல் தீர்வை பெற முடியாதவர்களாக தமிழினம் உள்ளது.

பேரினவாத சக்திகளின் கொள்கைகளை தமிழினம் ஏற்றுக் கொள்ளாததன் காரணமாக காலத்திற்கு காலம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் அரசாங்கங்கள் தமிழ் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யாமல் புறக்கணித்து வருகின்றன.

இருப்பினும் நாம் கொண்ட கொள்கையில் பற்றுறுதியுடன் கல்வியில் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டியது அவசியமாகும் கடந்த 62 வருட காலமாக தமிழினம் ஏமாற்றப்பட்டு வருகின்றது இருப்பினும் எமது பிரச்சினை சர்வதேச சமூகத்தின் பார்ை;வக்கு சென்று விட்டதால் இனிமேல் எம்மை ஏமாற்ற எவராலும் முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (4-2)

# இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் முதல்வர் பேசியது பாராட்டத்தக்கது

## சீமான் புகழாரம்




தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்தும் தாக்குதலை தமிழக மக்கள் என்று பாராமல் இந்திய மக்கள் என்று பாருங்கள் என்று தன்னை சந்தித்த இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ரஞ்சன் மத்தாயிடம் முதலமைச்சர் ஜெயலலிதா கூறியிருப்பது உண்மையறிந்து சொல்லப்பட்ட தெளிவான வார்த்தைகளாகும் என நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை இந்திய இராணுவத்தின் மீது பாகிஸ்தான், சீன படையினர் தாக்குதல் நடத்துவதற்கு ஈடாக பார்க்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருப்பதன் மூலம் மத்திய அரசு தனது அணுகு முறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்கான அறிவார்ந்த ஆலோசனையாகும்.

வரலாற்றுக் காலத்தில் இருந்து தமிழ் மன்னர்களின் ஆளுமைக்கு உட்பட்டிருந்த கச்சதீவுப் பகுதியில் தமிழக மீனவர்களுக்கு உள்ள பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலை நாட்ட வேண்டும் என்று முதலமைச்சர் அழுத்தம் திருத்தமாக கூறியிருப்பது மிகுந்த பாராட்டுதற்குரியதாகும்.

மீனவர் பிரச்சினை மட்டுமின்றி போரினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை அவர்கள் வாழ்ந்த இடங்களிலேயே குடியமர்த்த வேண்டும் என்பதை இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்த வேண்டும் என்று அறிவுறுத்தியிருப்பதை நாம் தமிழர் கட்சி வரவேற்கிறது என அவ்வறிக்கையில் கூறியுள்ளார்.(4-2)



இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளையினரால் ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் நடமாடும் சேவையொன்று அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வாடிக்கையாளர் ஒருவருக்கு குத்தகை கடனடிப்படையில் இலங்கை வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் க.லக்ஷ்சுமணன் வாகனத்திற்கான திறப்பை வழங்குவதையும் படத்தில் காணலாம். (படம்:- நவாலிச் செய்தியாளர்)

# ஒருவார காலத்திற்கு ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடாத்த தடை

தேர்தல் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் தேர்தலுடன் தொடர்புடைய ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுக் கூட்டங்கள் ஒருவார காலத்துக்கு நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் கடமைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார்.

வெற்றி பெற்ற வேட்பாளர்கள் அமைதியான முறையில் மற்றவர்களுக்கு இடையூறின்றி தமது வெற்றிக் கொண்டாட்டங்களை மேற்கொள்ளுமாறும் எவரும் கலவரங்களில் ஈடுபட வேண்டாமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

தேர்தலுக்கு பிந்திய பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக அவரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

முல்லேரியா பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை தவிர வேறு எந்தப் பகுதியிலும் பாரிய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறவில்லை என்றார். (4-2)

# இந்தியக்கடல் எல்லையை வரையறை செய்யவேண்டும்

## சரத்குமார் கோரிக்கை

(ஈரோடு)

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுக்க இந்திய கடல் எல்லையை மத்திய அரசு உடனடியாக வரையறை செய்ய வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சித் தலைவரும் எம்.எல்.ஏவுமான சரத்குமார் தெரிவித்தார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அவர் தெரிவித்தது வருமாறு, உள்ளூராட்சித் தேர்தலில் அ.தி.மு.க கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் பிரசாரம் செய்கிறேன். ஈரோட்டில் அ.தி.மு.க வேட்பாளர்களை ஆதரித்து எதிர்வரும் 13 ஆம் திகதி பிரசாரம் செய்ய உள்ளேன்.

இலங்கை இராணுவத்தால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க இந்திய கடல் எல்லையை மத்திய அரசு உடனடியாக வரையறை செய்ய வேண்டும். கடல் எல்லையில் இந்திய இராணுவத்தை கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

கொமன்வெல்த், ஸ்பெக்டரம் என பல்வேறு ஊழல் புகாரில் சிக்கியுள்ள மத்திய காங்கிரஸ் அரசு ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். கூடங்குளம் அணு மின் நிலையத்தைப் பொறுத்தவரை பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தொடர் நடவடிக்கைகளை பிரதமர் உடனடியாக அறிவிக்க வேண்டும். நடிகர் சங்கத்துக்கு புதிய கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இதன்பின்னர் நடிகர் சிவாஜி கணேசனுக்கு மணிமண்டபம் கட்டும் பணி தொடங்கும் என்றார். (4-2)

## பசில்-மத்தாய் சந்திப்பு

# 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம் தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாய், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவுடன் நேற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

வடக்கு -கிழக்கில் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இதன் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

யாழில் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கும் இந்தியாவின் திட்டம் தொடர்பில் இரு தரப்பினரும் தமது அபிப்பிராயங்களை முன்வைத்துள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பையடுத்து தமிழ் மக்களின் நிலைப்பாடு பற்றி ரஞ்சன் மத்தாய் அமைச்சருக்கு தெளிவுபடுத்தியதாகவும் அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (4-2)


## பணி நிலை வேண்டுகை

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட துணுக்காய், மாங்குளம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் நேரக்கணிப்பாளராகப் பணி செய்வதற்கு தகுதியுடைய ஆண்கள் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் 15.10.2011ஆம் நாள் காலை 8.30 மணிக்கு முல்லைத்தீவில் அமைந்துள்ள சங்கப் பணிமனைக்கு நேரில் வருகை தருமாறு வேண்டுகின்றோம். குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை :- 25-40
கல்வித் தகைமை :- க.பொ.த. (சா.த) நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்,
முல்லைத்தீவு.

(6365)



# பிரதேச அபிவிருத்தித் திட்டங்களுக்கான தீர்மானங்கள் உறுப்பினரால் முன்வைப்பு

வலி. தென்மேற்குப் பிரதேசசபையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் அடுத்துவரும் மாதாந்தக்கூட்டத்திற்காக 17 தீர்மானங்களை முன்வைத்து அனுப்பியுள்ளார். இத்தீர்மாணங்கள் அனைத்தும் பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 12 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் இப் பிரதேச சபையில் உறுப்பினர் ஒருவர் பாரபட்சமின்றி சகல பிரதேசங்களின் அபிவிருத்தி கருதி 17 தீர்மானங்களை முன்மொழிந்து சபைக்கு அனுப்பி வைத்துள்ளமை சக உறுப்பினர்களையும் திருப்திப்படுத்தியுள்ளது. இத்தீர்மானங்கள் பற்றி தவிசாளர் சகல உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இதேவேளை பிரதேச சபையின் மாதாந்த கூட்டங்களின் அறிக்கை சகல உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் மாதாந்தக் கூட்டத்தில் கேட்டிருந்தார். ஆனால் முதலாவது கூட்ட அறிக்கை அனுப்பப் படாமல் இரண்டாவது கூட்டறிக்கை அனுப்பப்பட்டது குறித்து அவர் விசனம் தெரிவித்துள்ளார். (4-2)

# சர்வதேச அழுத்தத்தை குறைப்பதற்கு நம்பகமான நடவடிக்கைகள் அவசியம்



இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ள நிலை யில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் இலங்கை அரசாங்கம் எவ்வாறு பதிலளிக்கப் போகிறது எனவும் கேள்வி எழுப்பப்படுவதாக சர்வதேச ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது குறித்து செய்திக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ள ஊடகம் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் நம்பகரமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

இச்செய்திக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபையின் அண்மை கூட்டத்தொடரின் போது போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கைக்கு எதிராக மேற்கத்தேய நாடுகளால் கொண்டு வரப்படவிருந்த தீர்மானத்திலிருந்து இலங்கை அரசாங்கம் தப்பித்து கொண்டுள்ளது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை தனது நட்பு நாடுகளுடன் இணைந்து எதிர்கொள்ளத்தயாராக இருப்பதாகவும் இலங்கை அரசாங்கம் கூறியிருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் பேரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என மேற்கத்தேய நாடுகள் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

ஆனால் அப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் தேசிய அளவில் இதுவரை உரிய நம்பகரமான விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை.

அவுஸ்திரேலியாவில் இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் மாநாட்டில் இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விவாதிக்கப்பட வேண்டும் என கனடா முதற்தடவையாக வலியுறுத்தியுள்ளது.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி கையளிக்கப்பட வேண்டியது உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரின் போது விவாதிக்கப்படவேண்டும் என நடந்து முடிந்த மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கனடா பரிந்துரைத்திருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நம்பத்தகுந்த சாட்சியங்களை ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்குழு முன் வைத்துள்ளது.

இப்போரின்போது தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நீதிசார் தீர்மானங்களுக்கு இலங்கை அரசாங்கமே பொறுப்பு கூறவேண்டும்.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை அரசா ங்கம் கூறிவருகின்ற போதிலும் நல்லிணக்க ஆணைக் குழுவின் நம்பகத்தன்மை குறித்து உள்ளூர் மற்றும் சர்வதேச மனித வுரிமை அமைப்புகள் கேள்வி எழுப்பியுள்ளன.

அவுஸ்திரேலியாவில் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கும் 30 ஆம் திகதிக்கும் இடையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பு மாநாட்டில் இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எத்தகைய பதிலை அளிக்கப் போகின்றது எனவும் கேள்வி எழுப்பப்படுகின்றது.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களைக் குறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் நம்பகத்தன்மையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் போர் இடம்பெற்ற போது நடைமுறையில் இருந்த அவசர காலச் சட்ட நடைமுறைகள் நீக்கப்பட்டுள்ள போதிலும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு விதிமுறைகளை கடந்த மாதம் இலங்கை அரசாங்கம் அறி முகப்படுத்தியுள்ளது.

இந்நடவடிக்கையானது இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் எதிரிகளை அல்லது ஆட்சியை எதிர்ப்பவர்களை ஒடுக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட புதிய நகர்வாக



கருதப்படுகின்றது.


இலங்கையின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கொண்டுள்ளமை மற்றும் பலவீனமான எதிர்க்கட்சி போன்ற காரணங்களால் இலங்கை அரசாங்கம் புதிய சட்டவிதிகளை அமுல்படுத்தும்போது அவற்றைத்தடுத்து நிறுத்த முடிவதில்லை.

இலங்கையில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்ட விதிகளின் கீழ் இணைக்கப்பட்டுள்ள புதிய சட்டவிதிகளின் கீழ் போரின் போது அறிவிக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ் மக்களை ஒடுக்குவதற்காக இலங்கை அரசாங்கத்தால் பயன்படுத்தப்பட்ட சட்டங்கள் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மேற்கத்தேய நாடுகளின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்ற தமிழ்மக்களின் நகர்வுகளைக் கட்டுப்படுத்துமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**நன்றி:-இணையம்**

## வலை உற்பத்தி நிலையங்கள் அமைச்சர் டக்ளஸின் பொறுப்பில்



கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறைஅமைச்சின் கீழ் செயற்பட்டு வந்த வீரவில மற்றும் லுணுவில மீன்பிடி வலை உற்பத்தி நிலையங்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கொழும்பிலுள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சில் இன்று கைச்சாத்திடப்பட்டது. பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் கடற்றொழிலாளர் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ண ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த மீன்பிடி வலை உற்பத்தி நிலையங்கள் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள வடகடல் நிறுவனத்துடன் இணைந்து செயற்படவுள்ளது.

(4-2)

## நீதிமன்றத்தால் அபராதம்

(கிளிநொச்சி)

ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்தநபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 3 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(கிளிநொச்சி)

அனுமதிப்பதிரம் இன்றி அரசசாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின்பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமர் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்ற வாளியாகக் கண்டு 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கியதோடு ஒருமாத கட்டாய சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(கிளிநொச்சி)

ஆயிரத்து 875 மில்லிலீற்றர் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நிதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 5 ஆயிரம் ருபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

(4-3)

அவன் போறான் குடிகாரன். எனக்கு ஊத்தடி கள்ளை. – தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இதோ கயிறு இழுப்புப் போட்டி பழைய, புதிய அதிபர்கள் பங்கேற்பு

அன்புக்குரிய மாணவர்களே! நீங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நீங்களே இந் நாட்டின் வருங்கால சிற்பிகள்.

இந்தநாடு – மனித சமூகம் உயர்வடைய – மேன்மையடைய, எல்லோர் மீதும் அன்பு காட்டுங்கள், விட்டுக் கொடுங்கள், மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளியுங்கள்.

இவ்வாறு இந்த நாட்டின் ஜனாதிபதி முதல் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் கல்விப் பீட விரிவுரையாளர்கள், புத்திஜீவிகள், அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் கூறிக்கொள்கின்றனர்.

எனினும் மாணவர்கள் அவர்களின் உரையைச் செவிமடுப்பதாகவோ அல்லது அதன்படி நடப்பதாகவோ இல்லை. இது ஏன் தெரியுமா?

மாணவர்களுக்கு அறிவுரை கூறுகின்ற அநேகர் தாங்கள் கூறும் அறிவுரைக்கேற்ப தாம் நடந்து காட்டுவதில்லை.

அரசாங்கம் ஜனநாயகத்தை மதிக்காத போது உயர் கல்விப் பீடத்தைச் சேர்ந்தவர்கள் ஒழுக்கத்தைக் கட்டிக்காக்காத போது,

சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய பொலிஸார் இலஞ்சம் வேண்டும் போது,

ஆசிரியர்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி ஒருவரை ஒருவர் குறை அளக்கும் புராணத்தை மாணவர்கள் முன் பாடும் போது, எப்படி மேற் குறிப்பிட்ட அறிவுரைகளை மாணவர்கள் கடைப்பிடிப்பர்.

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுகிறார், 'ஒருவருக்கு நீ அறிவுரை கூறமுன் அது தொடர்பில் உனது நிலைமை எவ்வாறு உள்ளது என்பதை ஒரு கணம் எண்ணிப்பார்'.

இப்போதெல்லாம் எங்கள் வடபுலத்து தமிழ்ப் பாடசாலைகளில் ஒரு கலாசாரம் பரவி வருகிறது.

அது என்னவெனில் ஓய்வுபெற்றுச் செல்கின்ற அதிபருக்கும் கடமையைப் பொறுப்பேற்கும் அதிபருக்கும் இடையே நடைபெறும் கழுத்தறுப்புக் கலாசாரமாகும்.

இந்நிலைமை எல்லாப் பாடசாலைகளுக்கும் பொருந்தாததாயினும் பெரும்பாலான பாடசாலைகளில் இந்நிலைமை பெரும் மோசமாகி விட்டது. இதனால் பாடசாலைகளின் வளர்ச்சி பெரும் பாதிப்படைவது மட்டுமன்றி மாணவர்களும் ஆசிரியர்களும் கன்னை பிரிந்து நின்று வேம்படி, புளியடி என்று கயிறு இழுப்பு நடத்துகின்றனர்.

ஆ! கடவுளே! கல்விக்கு துரோகம் இழைப்பார் கொடுமையைத் தடுப்பது யார்?

# வடக்கில் 79 பாடசாலைகளை புனரமைக்க இந்தியா உதவி!

(கொழும்பு)

வடக்கில் 79 பாடசாலைகளை புனரமைப்பதற்கு இந்தியா உதவியளிக்க வுள்ளது. 160 மில்லியன் இலங்கை ரூபாய் செலவில் இப் புனரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக இந்திய வெளிவிவகார செயலாளர் ரஞ்சன் மத்தாய் நேற்று திங்கட்கிழமை தெரிவித்தார்.

இலங்கைக்கு 3 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்ட இந்திய வெளி விவகார செயலாளர் கொழும்பில் உள்ள இந்தியச் செய்தியாளர்களைச் சந்தித்த போதே இத் தகவலைத் தெரிவித்தார்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இந்த பாடசாலைகள் அமைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அதேவேளை மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரம் கோவிலை புனரமைக்கும் பணியை இந்தியா ஏற்கவுள்ளதாகவும் சம்பூரிலுள்ள மற்றொரு பழைமையான ஆலயத்தை புனரமைப்பதற்கும் இந்தியா உதவும் எனவும் இந்திய வெளி விவகார செயலாளர் ரஞ்சன் மத்தாய் கூறினார்.

நேற்று காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த இந்திய வெளி விவகார செயலாளர் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு உட்பட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடினார். மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்கு அரசாங்கம் உத்தேசிப்பதாக ரஞ்சன் மத்தாய் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து கூறுகையில், அமைதியான சூழலொன்று நிலவுவதுடன் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிகள் குறித்து ஆராய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். இரு தரப்பையும் சேர்ந்த மீனவர்களுக்கிடையில் கிரமமான சந்திப்புக்களை நடத்துவது இதில் ஒரு பகுதியாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப் படும் வீடமைப்புத் திட்டம் குறித்து கூறுகையில், இந்த நடவடிக்கைகள் மெதுவாக இடம் பெறுவதாக அவர் ஒப்புக்கொண்டார். முதற் தொகுதி வீடுகள் எதிர்வரும் சில மாதங்களில் பயன்பெறுநர்களிடம் ஒப்படைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (பர)

## சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டம்

(மண்டைதீவு)

மண்டைதீவு மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கான சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்றுக்காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. இதில் ஊர்காவற்துறை பொலிஸ் உத்தியோகஸ்தர்கள், கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள், சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் என 25 பேர் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (எ)

## புற்றுநோய் ஆலோசனை மையம் போதனா வைத்தியசாலையில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் 8 இலட்சம் ரூபா நிதிப் பங்களிப்புடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் புற்றுநோய் கல்வி தொடர்பான ஆலோசனை மையம் ஒன்று அமைக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் நிறைவேற்று அதிகாரி ராஜேந்திரா தியாகராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆலோசனை மையத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் மனிதவள அதிகாரி ஜே.ஆர். பி.பைவா சிறப்பு விருந்தினராகவும் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டார்.

அத்தோடு இந்நிகழ்வில் சின்மயா மிசனின் தலைவர் பிரம்மச்சாரி சைதன்யா சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், யாழ். போதனா வைத்தி சாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா, யாழ்.போதனாவைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் ஜெயக்குமார், வைத்திய கலாநிதி ரவிராஜ் எனப்பலர் கலந்து கொண்டனர். (எ-6)

## கைதடி ஆயுர்வேத வைத்தியசாலைக்கு இருமாடிக் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் சித்த மருந்துகளின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் சித்த மருத்துவத் துறையை வளர்ச்சியடையச் செய்யலாம் என்ற அடிப்படையில் இருமாடிகளைக் கொண்ட நவீன சித்த மருந்துவ உற்பத்திக்கான நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுதேச வைத்திய அமைச்சர் சாலிந்த திசநாயக்கா வால் வைத்தியசாலை வளாகத்தில் நாட்டப்படவுள்ளது.

இந் நிகழ்வில் சுதேச வைத்திய பிரதி அமைச்சர் பண்டுபண்டாரா, சுதேச அமைச்சின் செயலாளர் மற்றும் அமைச்சு அதிகாரிகளும் ஆயுர்வேத திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பாக வைத்தியசாலைச் சமூகத்துடனும் யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறையினருடனும் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதுடன் மேலும் பரம்பரை வைத்தியர்களுடனான சந்திப்பு இடம்பெறவுள்ளதாக கைதடி சித்த மருத்துவ வைத்திய சாலை வைத்தியப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (4-2)

## கொக்குவில் இந்துவின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் 101ஆவது ஸ்தாபகர் தினமும் நாளை மறுதினம் 13 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் பி. கமலநாதன் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் மங்களா காட்சியறை உரிமையாளருமான ஜே.ஜெயந்தன் கலந்து கொள்கிறார். பரிசில்களை திருமதி சந்திரமதி கமலநாதன் வழங்கிவைப்பார். (எ)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்


### நலந்தரும் நல்லவழி



மகத்தான பணியினை ஆற்ற வேண்டுமாயின் நீண்ட காலத்திற்கு இடையறாத முயற்சி பேராண்மையும் தேவைப்படுகிறது. இந்தப் பணியில் ஒரு சிலர் தோல்வி காணலாம். அதற்காக நாம் மனம் உளைய வேண்டியதில்லை. ஒரு பெரிய காரியத்தைச் செய்யும் போது நடுநடுவே பலர் வீழ்ச்சியுறுவதும் இடைஞ்சல்கள் ஏற்படுவதும் சகஜமே. பெரும் பெரும் துன்பங்கள் தோன்றலாம். மனிதனின் தன்னலமும் மற்ற பிற தீமைப்பேய்களும் எழுந்து தலைவிரித்தாடலாம். இவற்றையெல்லாம் ஆன்மீகம் எனும் பெரு நெருப்பிலிட்டுப் பொசுக்க வேண்டும். இறைவனை நோக்கிச் செல்லும் பாதை மிகவும் செங்குத்தானது. கரடுமுரடானது. பலர் இப்பாதையில் சென்றிருப்பதுதான் வியப்பிற்குரியது. இதில் சென்ற பலர் தோல்வி கண்டது வியப்பில்லை. ஆயிரம் இன்னல்கள் வந்து மோதினாலும் அவற்றின் நடுவே பண்பாட்டை நிறுவ வேண்டும். நாகரிகத்தின் வரலாறு யாதெனில் தெய்வம் மனிதனாகி வந்தது என்ற முன்னேற்றத்தின் வளர்ச்சியே ஆகும்.

# இந்தியா, சீனா, அமெரிக்கா இணைந்து செயற்பட வேண்டும்

## ஹிலாரி கிளின்டன் வேண்டுகோள்



இந்தியா, சீனா, அமெரிக்கா இடையே வலுவான அமைப்புரீதியான உறவு தேவை என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார்.

இந்திய, அமெரிக்க நாடுகளுக்கிடையேயான உறவுகள், உலக விவகாரங்களில் இந்தியாவின் பங்களிப்பு மற்றும் பாகிஸ்தானுடனான அமெரிக்காவின் உறவு குறித்து செய்தியாளர்கள் கடந்த சனிக்கிழமை கிளின்டனிடம் கேள்வியெழுப்பினர்.

அப்போது மேற்கண்ட கருத்தை அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது,

இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையே வலுவான அமைப்புரீதியான நல்லுறவு நிலவ வேண்டும்.

அதன்மூலம் 21 ஆம் நூற்றாண்டின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். இந்தியாவின் தலைமையில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளோடு ஆசிய-பசுபிக்நாடுகளின் எதிர்காலமும் அமைதியான முறையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

இதற்காக இந்தியா கிழக்கு நாடுகளில் மட்டும் கவனம் செலுத்தாது அந்நாடுகளின் துணையுடன் உலகின் வளர்ச்சிக்கு உதவிட வேண்டும்.

இந்தியா, சீனா ஆகிய நாடுகளுடன் வலுவான உறவை மேற்கொள்ளும் முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபடும். இத்தகைய கூட்டுத் தலைமையை எட்டுவது என்பது எளிதானதல்ல.

இந்த 3 நாடுகளிடையேயும் பல்வேறு பிரச்சினைகளில் ஒருமித்த கருத்து கிடையாது. இருந்தாலும் சில பொதுவான பிரச்சினைகளில் குறிப்பிடத்தக்க ஒத்தகருத்துக்களை இம்மூன்று நாடுகளும் கொண்டிருக்கின்றன.

அதனடிப்படையில் இந்த நூற்றாண்டின் தீவிரமான சில பிரச்சினைகளில் முடிவுகளை எட்டும் நோக்கில் இந்நாடுகள் கூட்டாக தங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஏனைய நாடுகளுடனான இந்தியாவின் உறவு இந்தப் பிராந்தியத்துக்கே உதாரணமாக திகழ்கின்றது. ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் இந்தியா ரூ.98 ஆயிரம் கோடி வழங்கியுள்ளது.

பிராந்திய பாதுகாப்பு வளர்ச்சி, புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆகிய விடயங்களில் இந்தியாவும் அமெரிக்காவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளன.

அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய அமெரிக்க அரசினால் ஊக்குவிக்கப்படுகின்றன.

அதேபோல் இந்திய நிறுவனங்களும் அமெரிக்காவில் முதலீடு செய்யப்படுவதை வரவேற்கின்றோம். அடுத்த வாரம் நடைபெறவுள்ள இந்திய-அமெரிக்க உயர்கல்வி குறித்த கருத்தரங்கில் இரு நாடுகளுக்கிடையேயான கலாசார உறவுகள் பரிமாற்றப்படும்.

அத்தோடு மட்டுமல்லாமல் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் இரு நாடுகளின் நிலைப்பாடுகள் குறித்த கருத்துக்களும் பரிமாறிக் கொள்ளப்படும். இதன் மூலம் புதிய தளங்களிலும் கூட்டுறவு ஏற்பட வாய்ப்புண்டு.

இந்தியாவிலிருந்து மாணவர்களும் ஆசிரியர்களும் அமெரிக்காவுக்கு அதிகளவு வர வேண்டும். அதேபோன்று அமெரிக்க மாணவர்களும் ஆசிரியர்களும் இந்தியா செல்ல வேண்டும் என்று விரும்புகின்றோம்.

பாகிஸ்தானுடன் ஆழமான நீடித்த உறவு நிலவ வேண்டும் என்றே அமெரிக்கா விரும்புகின்றது. இருப்பினும் சில நேரங்களில் சிக்கலான, சவாலான சூழ்நிலைகள் இரு நாடுகளிடையேயும் ஏற்பட்டு விடுகின்றது.

ஆயினும் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் இணைந்து போரிட வேண்டும் என்ற சிக்கலான தேவையை இரு நாடுகளும் உணர்ந்திருக்கின்றன. அதனடிப்படையிலேயே அல்கொய்தாவை அழிப்பதற்காக நாங்கள் போராடி வருகின்றோம் என்றார். (4-2)

# கெய்ரோவில் திடீர் கலவரம்

## 19 பேர் மரணம்



(கெய்ரோ) எகிப்து தலைநகர் கெய்ரோவில் திடீரென ஏற்பட்ட கலவரத்தில் சுமார் 19 பேர் வரை கொல்லப்பட்டனர்.

150 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இது பற்றிய விபரம் வருமாறு,

எகிப்து தலைநகர் கெய்ரோவில் குறிப்பிட்ட இனமக்கள் வழிபாடு நடத்தி கொண்டிருந்தனர்.

அப்போது வாகனம் ஒன்றில் வந்த நபர்கள் வழிபாடு நடத்தி கொண்டிருந்த மக்கள் மீது துப்பாக்கியால் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் சுமார் 19 பேர் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து நகர் முழுவதும் கலவரம் பரவியது.

இச்சம்பவத்தில் சுமார் 150 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். (4-2)

# சீனாவுடன் அமைதியான முறையில் தாய்வான் இணைய வேண்டும்

## சீன ஜனாதிபதி அழைப்பு



சீனாவுடன் விரோதப்போக்கை கைவிட்டு தாய்வான் அமைதியான முறையில் இணையவேண்டும் என்று சீன ஜனாதிபதி ஹு ஜிண்டாவோ கேட்டுக் கொண்டு இருக்கிறார்.

சீனாவின் ஒரு பகுதியாக 100 ஆண்டுகளுக்கு முன்பு தாய்வான் தீவு இருந்தது. மன்னராட்சிக்கு எதிராக புரட்சி நடத்தி வெற்றி பெற்றவரும் சீனாவின் தந்தையாக கருதப்படுபவருமான சன்யாட் சென்னுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதல் யுத்தமாக வெடித்தது.

கம்யூனிஸ்டுகளின் கலாசாரப்புரட்சிக்கு முன்னால் ஈடு கொடுக்க முடியாத சன்யாட் சென் நாட்டை விட்டு ஓடி, தாய்வான் தீவில் நுழைந்தார். அந்த தீவை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த அங்கு இருந்தபடி ஆட்சி நடத்தினார்.

தாய்வானை சீனாவுடன் இணைக்க வேண்டும் என்பது தான் கம்யூனிஸ்ட்டுகளின் நோக்கம் ஆகும். ஆனால் தாய்வான் மக்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. அவர்கள் தனி நாட்டினராக இருக்கவே விரும்புகிறார்கள்.

சீன பாராளுமன்றத்தில் நடந்த விழாவில் பேசிய சீன ஜனாதிபதி ஹு ஜிண்டாவோ தாய்வான் சீனாவுடன் இணைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அப்போது அவர் கூறியதாவது.

கடந்த காலத்தின் காயங்களை குணப்படுத்தும் நேரம் வந்து விட்டது. தாய்வான் சீனாவுடன் அமைதியான முறையில் வந்து இணைய வேண்டும். தாய்வான் மக்கள் உட்பட அனைத்து சீனர்களின் அடிப்படை நலன்களுக்கு பாதுகாப்பாக பரந்த சீனா இருக்கும்.

தாய்வானை சீனா கலகக்கார மாநிலமாகத் தான் பார்க்கிறது. அது பிரதான நாட்டு உடன் இணையவேண்டும். இந்த நோக்கத்தை எட்டுவதற்கு பலப் பிரயோகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டாலும் அதையும் செய்வோம்.

அனைத்து சீனர்களையும் இணைத்து சீனாவை வலுவான ஊக்கமான சீனாவாக மாற்றுவது தான் சன் யாட் சென் உள்ளிட்ட முன்னோடிகளின் இலட்சியமாக இருந்தது. அந்த இலட்சியத்தை நிறைவேற்ற வரும்படி தாய்வானை கேட்டுக் கொள்கிறேன் என ஹு ஜிண்டாவோ கூறினார். (4-2)




# நியூசிலாந்து கடல் பகுதியில் கச்சா எண்ணெய் கசிவு



நியூசிலாந்தில் கடல் பகுதியில் தனது தரைதட்டிய கச்சா எண்ணெய் ஏற்றி வந்த கப்பலை மீட்கும் பணி தொடங்கி உள்ளது.

கிரிஸ் நாட்டை சேர்ந்த கோஸ்டமோர் இன்க் நிறுவனத்துக்கு சொந்தமான எம்.வி. ரீனா என்ற கப்பல் ஆயிரத்து 700 தொன் கச்சா எண்ணெயை ஏற்றிக் கொண்டு லைபீரியாவுக்கு சென்றது.

இந்த கப்பல் மோசமான வானிலை காரணமாக கடந்து புதனன்று நியூசிலாந்தின் டவுரங்கா துறைமுகத்திலிருந்து 12 கடல் மைல் தொலைவில் உள்ள ஆஸ்ட்ரோலேப் ரீப் என்ற பகுதியில் தரையில் மோதியது.

இதையடுத்து கன்டெய்னர்களிலிருந்து எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளது. இதுவரை 20 முதல் 30 தொன் கச்சா எண்ணெய் கடலில் கசிந்துள்ளதாக கூறப்படுகின்றது.

ஒருவேளை அனைத்து கன்டெய்னர்களும் உடைந்து ஆயிரத்து 700 தொன் கச்சா எண்ணெய் கடலில் கலந்தால் சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கப்படும்.

குறிப்பாக இப்பகுதி திமிங்கிலம், டொல்பின்கள், நீர் நாய்கள், பெங்குயின் மற்றும் பல்வேறு பறவைகளின் இருப்பிடமாக விளங்குவதால் இவற்றுக்கு பேராபத்து ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் தரைதட்டி உள்ள கப்பலில் உள்ள கச்சா எண்ணெயை கடலில் சிந்தாமல் மீட்பதற்கான பணியில் கடற்படையைச் சேர்ந்த 4 கப்பல்கள் மற்றும் 2 படகுகள் முழு வீச்சில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கச்சா எண்ணெய் கடலில் சிந்தாமல் தடுப்பதற்கான பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. நியூசிலாந்து கடல் பகுதியில் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதை குறைப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அதாவது கச்சா எண்ணெயை கடலில் சிந்த விடாமல் வேறு கப்பலுக்கு மாற்றப்படும் என கப்பலுக்கு சொந்தமான கோஸ்டோமேர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கச்சா எண்ணெய் கசிவு காரணமாக பெங்குயின் மற்றும் கடல் பறவைகள் சில பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சில பலியானதாகவும் நியூசிலாந்து வனவிலங்கு சுகாதார மைய தலைவர் பிரெத் கார்ட்ரில் தெரிவித்துள்ளார். மேலும் கடல் உணவுகளை உண்ண வேண்டாம் என்றும் அப்பகுதியில் உள்ளவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-2)

# நட்சத்திரங்கள் மோதுவதால் காமா கதிர்கள் உருவாகின்றன

## பூமி அழியும் ஆபத்து என்கின்றனர் விஞ்ஞானிகள்



விண்வெளியில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. அவற்றில் 2 நட்சத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுவதால் அதில் இருந்து பல தொன் சக்தி வாய்ந்த காமா கதிர்கள் உருவாகும். அதிக நச்சுத்தன்மை வாய்ந்த இவற்றில் இருந்து ஏற்படும் கதிர் வீச்சினால் பூமி அழியும் ஆபத்து உண்டாகும் என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இதற்கு முன்பு மேற்கொண்ட ஆய்வில் காமா கதிர்களின் கதிர் வீச்சு பூமியின் மேற்பரப்பில் உள்ள ஓசோன் படலத்தை முழுமையாக வற்றிப் போக செய்யும். இதனால் சூரியனின் அல்ட்ரா வயலட் கதிர்கள் உறிஞ்சி தடுக்கப்படாமல் பூமியில் விழும். அதனால் பூமியில் வாழும் உயிரினங்களின் மரபுத்தன்மையில் மாற்றம் ஏற்பட்டு அவை அழியும் என தெரிவித்து இருந்தனர். (4-2)






புற்றுநோய்க் கல்வி மற்றும் உளவள ஆலோசனை நிலையம் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதில் ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் ராஜேந்திரா தியாகராஜா உளவள ஆலோசனை நிலையத்தை திறந்து வைப்பதையும் வங்கியின் மனித வள மற்றும் நிர்வாகப் பிரதிப் பொது முகாமையாளர் ஜே.ஆர்.பி.எம். பைவா திரைநீக்கம் செய்வதனையும் உயர்மட்ட அதிகாரிகள் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். படம்:– ரவி போட்டோ

# வடக்கு மாகாண கிரிக்கெட் வீரர்களை தேசிய ரீதியில் அழைத்துச் செல்லத் திட்டம்

## – மஹேல ஜெயவர்த்தன தெரிவிப்பு



வடமாகாணத்தில் பாடசாலை ரீதியில் கிரிக்கெட் விளையாட்டினை விருத்தி செய்து அதிலிருந்து தெரிவு செய்யப்படும் வீரர்களை தேசிய மட்டத்திற்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படுமென்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளுக்கான 300 இலட்சம் ரூபாய் பெறுமதியான கிரிக்கெட் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு மேலும் கருத்து தெரிவித்த அவர், கடந்த 30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தம் தற்போது முடிவுக்கு கொண்டுவரப்பட்டு சமாதானம் மலர்ந்துள்ளது. இந்த தருணத்தில் வட மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொள்ள வாய்ப்பு கிடைத்தமையை எண்ணி நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதேவேளை வட மாகாணத்திலுள்ள இளைஞர்கள் மத்தியில் கிரிக்கெட் விளையாட்டினை ஊக்கப்படுத்தி அவர்களிடையேயான திறமையினை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அந்த வகையில் பாடசாலைக் காலங்களிலிருந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்றார்.

# ஒரு போட்டிக்கு ரூ. 4.5 கோடி செலவு

(கட்டாக்)

இந்திய – மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் போட்டிக்காக ரூபா. 4.5 கோடி செலவு செய்ய ஒரிசா கிரிக்கெட் சபை (ஓ.சி.ஏ) முடிவு செய்துள்ளது.


3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடரில் பங்கேற்க எதிர் வரும் நவம்பர் மாதம் மேற்கிந்திய தீவுகள் அணி இந்தியா வருகின்றது. இரு அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டி வரும் நவம்பர் 30இல் ஒரிசாவிலுள்ள கட்டாக்கில் நடக்கிறது.

இந்தப் போட்டிக்கு மட்டும் ரூபா. 4.5 கோடி செலவு செய்ய ஓ.சி.ஏ முடிவு செய்துள்ளது.

இப்போது இருக்கைகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதால் ரிக்கெட் வருமானம் மூலம் ரூபா. 3.18 கோடி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம் கடந்த 2009 இல் இந்தியா–இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டிக்கு நிர்ணயிக்கப்பட்ட ரிக்கெட் விலையில் மாற்றம் இருக்காது. மொத்தம் உள்ள 45 ஆயிரம் ரிக்கெட்டுகளில் 39 ஆயிரம் ரசிகர்களுக்கு விற்கப்படும் என தெரிகின்றது.

# ஜப்பான் ஓபன் டென்னிஸ் அன்டி முர்ரே சம்பியன்



(டோக்கியோ)

ஜப்பான் ஓபன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்தின் அன்டி முர்ரே, ஸ்பெயினின் ரபெல் நடாலை வீழ்த்தி சம்பியன் ஆனார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜப்பான் ஓபன் டென்னிஸ் தொடர் நடந்தது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் இங்கிலாந்தின் அன்டி முர்ரே, ஸ்பெயினின் ரபெல் நடாலை எதிர்கொண்டார்.

முதல் செட்டை நடால் 6:3 என கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட முர்ரே இரண்டாவது செட்டை 6:2 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3ஆவது செட்டில் அபாரமாக ஆடிய முர்ரே 6:0 என கைப்பற்றினார்.

இறுதியில் முர்ரே 3:6, 6:2, 6:0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனார்.

# வன்னி இறுதி யுத்தத்தின் போது இனவாதத்துடன் செயற்படவில்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)


விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின் போது படையினர் இனவாதத்துடன் செயற்படவில்லை என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற விசேட நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக இராணுவங்களால் தோற்கடிக்க முடியாத சக்தியாக விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்தது. எனினும் எமது ஜனாதிபதியின் தலைமைத்துவம் வழிநடத்தலின் கீழ் நாம் அதனைத் தோற்கடித்தோம். மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இலங்கை இராணுவத்தினர் மீது நாட்டை நேசிக்காத பலர் குற்றம் சுமத்துகிறார்கள். பயங்கரவாதத்துக்கு துணைபோகும் பலர் வெளிநாடுகளில் இருந்து கொண்டு தவறான பிரசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை சுதந்திரமான நாடு. இங்கு அனைத்து மக்களும் சுதந்திரமாக வாழ முடியும். இராணுவத்தினர் இனவாதத்துடன் எப்போதும் செயற்படமாட்டார்கள் என்பதை



நான் தெளிவாக சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என தெரிவித்தார். (ஏ-5)

# புங்குடுதீவில் கசிப்பு மீட்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஆலடிப்பகுதியில் நேற்று கசிப்பு உற்பத்தி செய்யும் குகை ஒன்று பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டது.

பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் கிராமசேவையாளர் முன்னிலையில் ஊர்காவற்துறை பொலிஸார் கசிப்பு குகையை கண்டுபிடித்தனர்.

இதன் போது கசிப்பு உற்பத்தி செய்யும் பொருட்கள் மற்றும் கோடா போன்ற பொருட்களையும் மீட்டனர். (ஏ)





ஹற்றன் நஷனல் வங்கியின் அச்சுவேலிக் கிளை திறப்புவிழா நேற்று நடைபெற்றது. இதில் பிரதம அதிதிகள் அழைத்து வரப்படுவதையும் ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் ராஜேந்திரா தியாகராஜாவினால் வங்கி திறந்து வைக்கப்படுவதையும் வாடிக்கையாளர் சேவை ஆரம்பித்து வைக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.




# இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி** ஸ்தாபனம்

10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு : 021 222 4134




# பாரத லக்ஸ்மனின் இறுதி நிகழ்வில் மகிந்த

முல்லேரியா பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் உயிரிழந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி தொழிற்சங்க பணிப்பாளர் நாயகமுமான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் பூதவுடல் கொலன்னாவையில் உள்ள



அவரது இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர் ஜாவத்தையில் உள்ள முக்கிய பிரமுகர்களுக்கான வீட்டுத் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தது.

அவரின் பூதவுடல் கொலன்னாவைக்கு கொண்டு வரப்பட்டபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சகோதரர் பசில் ராஜபக்ஷ உட்பட்டவர்கள் கலந்து கொண்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## முல்லேரியா...

பிரிவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் சீருடை அணிந்திருப்பதுடன் அடையாள ஆவணங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்ற கடுமையான விதிகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் யார் முதலில் சுட்டார் என்பதை கண்டறிவதில் அர்த்தமில்லை. இது உண்மையில் இது எமக்கொரு பேரழிவாகும்.

இந்நபர்களின் ஒழுங்கீன நடத்தைகள் குறித்து தேர்தலுக்கு முன்பாக தகவல் கிடைத்துடன் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை என செய்தியூளர்கள் கேட்டபோது, அப்படி செய்திருந்தால் அது கட்சியின் பிரசார நடவடிக்கைகளை பாதித்திருக்கும் என கூறினார்.

கடந்த காலத்திலும் தேர்தல் முடிந்தவுடன்தான் நாம் நடவடிக்கை மேற்கொண்டோம். தேர்தலுக்கு முன்பாக நடவடிக்கை மேற்கொண்டால் அது எமது வேட்பாளர்களின் பிரசாரர நடவடிக்கைகளுக்கு நியாயமற்ற பாதிப்பை ஏற்படுத்தும் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார். (ச)

## ஜப்பானில்...

யுள்ளது.

சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை. இந்த நிலநடுக்கத்தால் எந்த பாதிப்பும் ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை. இந்த நிலநடுக்கத்தால் புகுஷிமா அணுமின் நிலையத்திற்கு எந்தவித பாதிப்பும் ஏற் படவில்லை என்று அதை இயக்கிவரும் டோக்கியோ எலக்ட்ரிக் பவர் கம்பனி தெரிவித்துள்ளது.

புகுஷிமாவில் இருந்து 245 கி.மீ. தொலைவில் உள்ள டோக்கியோவில் பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் அதிர்ந்துள்ளன. (பா)

## மனோ கணேசனின்...

433 விருப்பு வாக்குகள் கிடைத்ததாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

அதேவேளை ஜனநாயக மக்கள் முன்னணி சார்பில் மனோ கணேசன், எஸ்.முகவரியன், குருசாமி நளன்ராஜ் தேவன், தங்கேஸ்வர்கீசன், எஸ் பாஸ்கரன், லோரன்ஸ் பெர்னாண்டோ ஆகியோர் கொழும்பு மாநகர சபைக்கு தெரி வாகியுள்ளனர்.

கொழும்பு மாநகர சபையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 6 முஸ்லிம்களும் 10 சிங்களவர்களும் தெரிவாகியுள்ளனர்.

ஜனநாயக மக்கள் முன்னணிசார்பில்6 தமிழர்கள்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர சபையில் இம்முறை தமிழர்களின் பிரதிநிதித்துவம் 8 ஆக குறைந்துள்ளது.

அதேவேளை 27 சிங்களவர்களும், 18 முஸ்லிம்களும் இம் முறை கொழும்பு மாநகர சபைக்கு தெரிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ச-பா)

## பாரத லக்ஸ்ம...

சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

துமிந்த சில்வா மேற்கொண்ட இத் தாக்குதலின் காரணமாக கீழே விழுந்த பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் காலில் துமிந்த சில்வாவின் ஆதரவாளர் ஒருவர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

இதன் பின்னர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் தலையில் சுடுமாறு எவரோ சத்தமிட்ட பின்னர் அவர் மீது சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் காயமடைந்த லக்ஸ்மன் பிரேமசந்திரவை வாகனத்திற்கு பின்னால் தூக்கி செல்ல அவரது மெய்ப்பாதுகாவலர்கள் முயற்சித்தபோது துமிந்த சில்வாவின் ஆதரவாளர்கள் அவர்கள் மீதும் தாக்குதல் நடத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தாக்குதலுக்கு உள்ளான குறித்த இரண்டு மெய்ப்பாதுகாவலர்களும் உயிரிழந்ததாக தெரிவித் அவர், துமிந்த சில்வா தரப்பினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டபோது பாரத லக்ஸ்மன் பிரேம சந்திரவின் தரப்பினரும் பதில் தாக்குதல் நடத்தியதாக பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இதன்போது துமிந்த சில்வாவின் தலையில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. லக்ஸ்மன் பிரேமசந்திர மற்றும் துமிந்த சில்வா ஆகிய இருவரினதும் ஆதரவாளர்களிடம் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மூலங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

கொலன்னாவ பிரதேசத்தில் போதைப்பொருள் வர்த்தகம் இடம்பெற்று வருவதாகவும் அதற்கு லக்ஸ்மன் பிரேமசந்திர கடும் எதிர்ப்பை வெளியிட்டு வந்ததாகவும் அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். (பா)

# ஐ.தே.கவின் நிர்வாகத்தை...

கடந்த பத்து வருடங்களாக கொழும்பு மாநகர சபையிலும், மேல் மாகாண சபையிலும், நாடாளுமன்றத்திலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாம் வழங்கியதைப் போன்ற நிபந்தனையற்ற ஆதரவை இனி மேலும் தொடர முடியாது. தலை நகர தமிழ் மக்கள் தங்களது நலனை முன்னிறுத்தும் பேரம் பேசும் சக்தியை எங்களுக்கு தந்துள்ளார்கள்.

இதுவே கொழும்பு மாநகரத்திலும், தெஹிவளை- கல்கிஸையிலும், கொலன்னாவையிலும் தமிழ் மக்கள் எங்களுக்கு தந்துள்ள ஆணையாகும். இதை நீங் கள் புரிந்துகொள்ளவேண்டும்என ரணில் விக்கிரமசிங்கவிடம் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சி 24 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஆளுங் கட்சி 16 ஆசனங்களை பெற்றுள்ளது. ஜே.வி.பியின் ஒரு ஆசனத்தை தவிர்த்து முஸ்லிம் காங்கிரஸ் 2 ஆசனங்கள் உட்பட அரச ஆதரவு அணிகள் 6 ஆசனங்களைப் பெற்றுள்ளன. எனவே அரசாங்கம் 22 ஆசனங்களை தன்வசம் கொண்டுள்ளது. மாநகர சபையில் 53 உறுப்பினர்களில் பெரும்பான்மை பலமான 27 ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் 6 ஆசனங்கள் எந்த கட்சிக்கும் தேவைப்படுகின்றன.

அதிக உறுப்பினர்களை கொண்ட கட்சி என்ற முறையில் ஐ.தே.க. நிர்வாகத்தை ஏற்படுத்தினாலும் மாநகரசபையை சீராக கொண்டு செல்வதற்கு பெரும்பான்மை பலம் தேவைப்படுகின்றது.

இச் சூழ்நிலையில் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜயசூரிய, ஜயலத் ஜயவர்த்தன ஆகியோர் நேற்று திங்கட்கிழமை மாலை மனோ கணேசனுடன் கலந்துரையாடினர். இக் கலந்துரையாடலின் பின்னர் மனோ கணேசன் கூறுகையில்;

நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் தெரிவித்த கருத்துக்களை கட்சியின் தலைமைக் குழு கூட்டத்தில் நாம் விரிவாக ஆராய்வோம். அவசியப்படுமானால் எமது கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர்கள் மேலதிக பேச்சுவார்த்தைகளை சம்பந்தப்பட்டவர்களுடன் நடத்துவார்கள்.

மக்கள் எமக்குதந்துள்ள ஆணைக்கு இசைவாக உரிய முடிவுகளை எமது கட்சி எடுக்கும். ஜனநாயக மக்கள் முன்னணிக்கு வாக்களித்து எங்கள் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்திய மக்களுக்கு எங்களது நடவடிக்கைகள் மூலமாகவே நன்றிகளை தெரிவிக்க விரும்புகிறேன் எனத் தெரிவித்தார். (ச)

## கொழும்பு...

பெரேரா பெயரிடப்பட்டுள்ளதாகவும் ரணில்விக்கிரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஏ.ஜெ.எம்.முஸாம்மில் 55 ஆயிரத்து 448 விருப்பு வாக்குகளையும், டயரஸ் பெரேரா 8ஆயிரத்து 732 விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை ஐ.தே.கவின் தமிழ் வேட்பாளரான ஜோன் ராம் 9 ஆயிரத்து 966 விருப்பு வாக்குகளைப் பெற்று ஐ.தே.க. விருப்பு வாக்கு பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


# சாரதி தேவை

சிறிய வேன் ஓடக்கூடிய சாரதி தேவை. (50 வயதிற்கு மேற்பட்டவர் மட்டும்) வேலை இடம் :- யாழ்நகர்

0775040714 (6372)

கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்

ROYAL ACADEMY

சாங்கானை

பொருளியல்

S. வரதராஜன்

A/L 2012

பாடத்திட்ட வகுப்பு

பணமும் வங்கியும் திங்கள் 3 - 4

வருமான வட்டப் பாய்ச்சல் புதன் 3 - 4

மீட்டல் வினாவிடை வகுப்பு

சந்தைச் செயற்பாடு

திங்கள்,புதன் 4.00 - 5.00

பொருளியல் அறிமுகம்

வியாழன் 3.00 - 5.00

A/L 2013

நெகிழ்ச்சிக் கோட்பாடு

திங்கள்,புதன் 5.00 - 6.00

ஆரம்பம் : 12 - 10 - 11

# பிலதெல்பியா மிஷனரி சபை

# ஆலய பிரதிஷ்டை

# அழைப்பு

கிறிஸ்துவுக்குள் அன்புடையீர்,
கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும்,
ஆசிர்வாதத்தினாலும்,
**இன்று 2011 அக்டோபர் மாதம் 11ம் திகதி**
**செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு**
**இல. 724, கண்டி வீதி, A9 அரியாலை, யாழ்ப்பாணத்தில்**
**அமைந்துள்ள**
**பிலதெல்பியா மிஷனரி சபையை**
**பாஸ்டர் P.S. ராஜமணி**
**(SIAG General Superintendent, India)**
அவர்களால்
பிரதிஷ்டை செய்து வைக்க நிச்சயித்திருப்பதால்
தாங்கள் தங்கள் குடும்பத்தோடும் மற்றும்
திருச்சபை ஊழியர்கள், தலைவர்களுடனும் வருகை தந்து
திருச்சபையை ஆசிர்வதித்து ஜெபிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.
**இப்படிக்கு**
**பாஸ்டர் போல் சற்குணராஜா**
**[ஸ்தாபகர் - தலைமைப் போதகர்]**
**போதகர்கள், மூப்பர்கள் மற்றும் விசுவாசிகள்.**
(6361)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.